
நால்வர் வரலாறு
கே. வி. குணசேகரம்
அருள் மிகு
திருஞான சம்பந்த
நாயனார்
அருள் மிகு
திருநாவுக்கரசு
நாயனார்
அருள் மிகு
சுந்தரமூர்த்தி
நாயனார்
அருள் மிகு
மாணிக்க வாசக
நாயனார்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



## என்னுரை

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரது வரலாற்றையும் இந்துசமய கலாச்சார அமைச்சின் பணிப்பாளர் திரு. அ. உமா மகேஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்க மிகவும் விரிவாக எழுதியுள்ளேன். சைவசமயத்தைப் பின்பற்றும் மாணவர்கள் முழுமையான சமய அறிவைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டு வரும் பணிப்பாளரும், அமைச்சர் சுவாமிநாதனும் அளப்பரிய சேவைகளைச் செய்து வருகின்றனர். ஒருவருக்கு உயர்பதவி கிடைத்தால் அவர் தன்னாலான உச்சச் செயற்பாடுகளைச் சமூகத்திற்காகச் செய்தல் வேண்டும். அந்த வகையில் இருவரினதும் பணி மெச்சத்தக்கது. குறிப்பாகச் சைவசமயத்தின் ஆதாரநூல்கள் பலவற்றை மீள்பதிப்புச் செய்து அவற்றின் தத்துவங்களை மக்களுக்குப் புரிய வைக்கின்றனர். இது மகத்தான ஒரு சேவையாகும். இவர்களது சேவை மேலும் ஓங்க எல்லாம் வல்ல சிவபெருமான் இவர்களுக்குத் துணையாக இருப்பார் வாழ்க இவர்களது நாமம் வளர்க இவர்களது சேவை.

நன்றி

**கே.வி.குணசேகரம்**

சிவமயம்

# நால்வர் வரலாறு

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வரலாறு

சோழநாட்டிலே உள்ள சீர்காழி என்ற ஊரில் சிவபாதவிருதயர் என்ற ஒரு பிராமணர் வாழ்ந்து வந்தார். அவர் சிவனின் மீது பேரன்பு பூண்டவர். சிவபூசையைத் தினமும் செய்பவர். அவரது மனைவி பகவதியார். தனது கணவனோடு சேர்ந்து சிவனுக்குச் சேவை செய்பவர். இருவரும் வசதியுடையவர்களாக இருந்தாலும் நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் அவர்களை வேதனைப்படுத்தின. சைவசமயத்தைப் பின்பற்றி வாழ்ந்த பல குடும்பங்கள் பொருளுக்கு ஆசைப்பட்டு சமணசமயத்தையும், பௌத்த சமயத்தையும் பின்பற்றத் தொடங்கினர். இது சிவபாதவிருதயருக்கும் அவரது மனைவிக்கும் பெரும் துன்பத்தைக் கொடுத்தது. சிவபாதவிருதயர் மக்களிடம் சென்று சைவசமயம் தான் மெய்ச்சமயம். ஏனைய சமயங்கள் வேதத்திற்கும் சிவனுக்கும் முரணானவை என்று எடுத்துரைத்தார். அவரது பேச்சை யாரும் கணக்கிலெடுக்கவில்லை. சமணமும், பௌத்தமும் தமிழ்நாடெங்கும் மிகவும் வேகமாகப் பரவி வந்தது. அதற்குக் காரணம் சைவசமயத்தை மெய்ச்சமயமாக ஏற்று அதை வளர்த்துவந்த பல அரசர்கள் மதம் மாறியமையேயாகும்.

யாரை நம்பியும் பயனில்லை. தான் வணங்கும் தோணியப்பரையும், பெரியநாயகி அம்மையாரையும் வணங்கி அதற்கு ஆவன செய்யுமாறு வேண்டுதல் செய்வதற்காக தோணியப்பரின் கோவிலுக்குச் சென்று அவரை வணங்கினார். “தோணியப்பரே, எனது பரம்பரையினர் இங்கு வாழ்ந்து உன்னையும் பெரியநாயகி அம்மையாரையும் வழிபட்டு வருகிறோம். ஆனால் இப்போது எமது ஊரவரும், எமது இனத்தவர்களும் உனது பெருமைகளை அறியாமல் அவைதிக சமயங்களான சமணமும் பௌத்தமும் தான் மெய்ச்சமயங்கள் என்று நினைத்து அச் சமயங்களைப் பின்பற்றி வருகின்றனர். அதற்கு அரசர்களும் துணை நிற்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும். மீண்டும் சைவசமயம் மேலோங்க வேண்டும். நான் திருமணம் செய்து பல ஆண்டுகளாகின்றன. இன்னும் எனக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. நான் நீ தகுந்த நேரம் தருவாயெனப் பொறுத்திருந்தேன். இப்போது நேரம் வந்துவிட்டது. நீ எனக்கு ஒரு ஆண் குழந்தையைத் தருதல் வேண்டும். அப்பிள்ளை சைவத்தையும், தமிழையும் வளர்த்தெடுக்க வேண்டும். முன்புபோல் அரசும் மக்களும் சைவசமயத்தைப் பின்பற்ற

அப்பிள்ளை வழிவகைகளைச் செய்தல் வேண்டும். மக்கள் சமயம் மாறுவதைப் பார்க்கப் பயமாக உள்ளது. இன்னும் சில காலத்தில் சைவசமயம் அழிந்துவிடும் எனப் பயப்படுகிறேன். அதனால் சைவசமயத்தை வளர்க்கக்கூடிய வல்லமை உள்ள ஒரு பிள்ளையைத் தா" என்று அழுதார். அன்றிரவு தோணியப்பர் சிவபாதவிருதயர் கனவில் தோன்றி; "சிவபாதவிருதயரே, கவலை கொள்ள வேண்டாம். உமக்குப் பிறக்கப்போகும் மகன் சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுப்பான். அதனால் சைவசமயம் முன்பிருந்ததைவிட மேலோங்கும். அவனது சேவை ஊழிக்காலங்களைக் கடந்தும் நிலைக்கும்" என்று அருளி மறைந்தார்.

திடுக்கிட்டுக் கண்விழித்த சிவபாதவிருதயர் உடனே குளித்துவிட்டுத் தோணியப்பரின் சந்நிதிக்குச் சென்று வணங்கி; "சிவனே நெடுங்காலமாக எனது மனதில் இருந்த அச்சமும், கவலையும் அகன்றுவிட்டன. நான் மகிழ்வுடனும், துணிவுடனும் வாழ்வேன்" என்று மகிழ்ந்தார்.

சில வாரங்கள் செல்லப் பகவதியார் கருவுற்றார். சிவபாதவிருதயரும் பகவதியாரும் மிக்க மகிழ்வுடன் தோணியப்பரையும் பெரியநாயகியையும் வணங்கி வந்தனர். பத்தாவது மாதம் பகவதியாருக்கு ஓர் அழகிய ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையை அவர்கள் மிகுந்த அன்புடன் வளர்த்து வந்தனர். அதற்குச் சிவனின் பெருமைகளையும், சைவசமயத்தின் தத்துவங்களையும் உபதேசித்து வந்தனர்.

குழந்தைக்கு மூன்று வயது முடிந்தது. சிவபாதவிருதயர் தோணியப்பரின் கோவிலுக்கு அருகே இருக்கும் குளத்தில் நீராடிவிட்டுத் தோணியப்பரை வழிபடுவார். அன்று அவர் நீராடப் புறப்பட்டபோது குழந்தை தானும் கூட வரப்போவதாக அடம் பிடித்தது. வேறு வழியின்றிக் குழந்தையை அழைத்துச் சென்ற சிவபாதவிருதயர் அதைக் குளக்கட்டில் அமரச் செய்துவிட்டுக் குளத்தில் இறங்கி நீராடினார். பின் குளத்தில் மூழ்கி நீராடினார். தந்தை குளத்தில் மூழ்கி நீராடியமையால் தந்தையைக் காணாத குழந்தை "அம்மா அப்பா" என்று அழைத்து அழுதது. வெகுநேரமாகத் தந்தையைக் காணாமையால் குழந்தையின் அழுகை அதிகரித்தது. குழந்தையின் அழுகைச் சத்தம் உலக மாதாவான பெரியநாயகிக்கும் உலகின் தந்தையான தோணியப்பருக்கும் கேட்டது. அதைக் கேட்டு வருந்திய இருவரும் இடப வாகனத்தில் ஏறிக் குழந்தை இருந்து அழும் இடத்திற்கு வந்தனர்; "அம்மையே எமது பாலகன் பசியால் அழுகிறான். உடனே அவனுக்குப் பொற்கிண்ணத்தில் உனது ஞானப்பாலைக் கறந்து ஊட்டு" எனப் பணித்தார்.

அதைக்கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்த பெரியநாயகியம்மையார் தனது முலையில் இருந்த ஞானப்பாலைக் கறந்து, குழந்தையைத் தனது மடியில் தூக்கிவைத்துப் பருக்கினார். அதனால் மகிழ்ந்த குழந்தை மகிழ்வுடன் சிரித்துப் பெரிய நாயகியின் கையைப் பிடித்து தனது வாய்க்குள் வைத்தது. அதை பிரியமனமின்றிப் பிரிந்த பெரியநாயகி அம்மையும் தோணியப்பரும் தமது வாகனமான இடபத்தில் ஏறி மறைந்தனர்.

குளித்துவிட்டு வந்த சிவபாதவிருதயர் குழந்தையின் கடைவாயால் பால்வழிவதைக் கண்டு திடுக்கிட்டார். அவருக்குக் கோபம் வந்தது. அருகில் இருந்து கோலை எடுத்த சிவபாதவிருதயர்; "நீ யார் தந்த பாலை உண்டாய்" என அதட்டினார்.

பிள்ளை மகிழ்வுடன் சிரித்தது. பின் தோணியப்பரின் கோபுரத்தைத் தனது சுட்டுவிரலால் சுட்டிக் காட்டி, "தோடுடைய செவியன்" என்னும் தேவாரத்தைப் பாடியது. சிவபாதவிருதயருக்கு எதுவும் புரியவில்லை. குழந்தை தனது சுட்டுவிரலால் காட்டிய கோபுரத்தை நிமிர்ந்து பார்த்தார். அங்கு தோணியப்பரும் பெரியநாயகி அம்மையும் காட்சி கொடுத்தனர். அதைக் கண்டு அதிசயித்த சிவபாதவிருதயர் இனிச் சைவசமயம் தழைக்கும் என்ற நம்பிக்கையுடன் தோணியப்பரையும் பெரியநாயகி அம்மையாரையும் வணங்கினார். அப்போது தேவர்கள் வானில் தோன்றி பூமாரி சொரிந்தனர். அதைக் கண்ட சிவபாதவிருதயர் மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடினார். அதன்பின் குழந்தையைத் தூக்கித் தோழில் சுமந்தபடி வீட்டுக்குச் சென்றார். இதை அறிந்த சிவனடியார்கள் பலர் தோணியப்பரைப் புகழ்ந்து தேவாரங்களைப் பாடியபடி ஆனந்தக் கூத்தாடினர். அன்று அவரின் வீட்டில் பெருந்தொகையான மக்கள் கூடினர். ஞானசம்பந்தப் பெருமானின் புகழைப் பாடினர். அவரது திருவடியைத் தொழுதனர். ஊர் முழுவதும் இதே கதைதான். அதனால் மதம் மாறியவர்களின் மனதில் பயம் உண்டானது.

மறுநாள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தோணியப்பரின் ஆலயத்திற்குச் சென்றார். அன்று ஏராளமான மக்கள் கூடிநின்று, சம்மந்தரை வரவேற்றனர். மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட்டன. ஆலயத்துள்ச் சென்ற சம்பந்தர் தோணியப்பரை வணங்கினார். சம்பந்தர் சிறுபிள்ளையாக இருந்தமையால் அவரைத் தூக்கித் தோழில் வைத்துச் சுமந்தபடி சிவபாதவிருதயர் பல்வேறு சிவன்கோவில்களுக்குச் செல்வார். அப்போது சிவனடியார்கள் கூட்டம் அவரைப் பின்தொடர்ந்து செல்லும். அன்று அவர் திருக்கோலக்கா என்ற பதியில் கோவில் கொண்டிருக்கும் சிவனைத் தரிசிப்பதற்காகச் சிவனடியார்களுடன் சென்றார். திருக்கோவில் சம்பந்தரின் வருகையை அறிந்து

அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோவிலின் உள்ளே சென்ற சம்பந்தர் சிவனை வணங்கிவிட்டு "மடையில் வாளை" என்ற தேவாரத்தைப் பாடினார். அதற்கு அவர் தனது கையினால் தாளம் போட்டார். அப்பொழுது சிவன் மனம் மகிழ்ந்து தாளம் போடுவதால் அவரது பூப்போன்ற கைகள் வருத்தமடையும் என்று நினைத்து திருவைந்தெழுத்தைப் பதித்த பொன்னாலான தாளத்தை அளித்தார். சம்பந்தர் அத்தாளத்தை தேவாரத்திற்கு ஏற்ற வகையில் அடித்தபோது அதிலிருந்து ஓசை வரவில்லை. அதை உணர்ந்த அம்மையார் அத்தாளத்திற்கு ஓசை கொடுத்தருளினார். இதனால் அங்கு சிவனுடன் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருளும் இறைவிக்கு 'ஓசை கொடுத்த நாயகி' என்ற சிறப்புப் பெயர் உண்டானது.

சம்பந்தப் பெருமான் ஞானப்பாலுண்டதையும், சிவனிடம் பொன்னாலான தாளம் பெற்றதையும் அறிந்த சோழநாட்டு மக்கள் சம்பந்தரைத் தேடிவந்து வணங்கினர். பின்னர் அவரைத் தத்தமது ஊர்களுக்கு வரும்படி பணிவுடன் அழைத்தனர். சம்பந்தர் மகிழ்வுடன் சம்மதித்தார்.

திருநீலகண்ட பெரும்பாணர் என்பவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பெருமைகளை அறிந்து மகிழ்ந்து அவரைத் தரிசிப்பதற்காக விறலியாரோடு சீர்காழிக்கு வந்தார். அவரைக் கண்டு மகிழ்ந்த ஞானசம்பந்தர் அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். திருநீலகண்ட பெரும்பாணரும் ஞானசம்பந்தரின் கால்களைக் கட்டியணைத்து முத்தமிட்டு வணங்கினார்; "சுவாமி தாங்கள் பதிகம் பாட, நான் அதை யாழில் இசைக்க வேண்டும்" என்று இரந்து கேட்டார். உடனே தோணியப்பரை வணங்கிய ஞானசம்பந்தர் அவரின்மீது பதிகம் பாட திருநீலகண்ட பெரும்பாணர் யாழில் அதை இசைத்தார். பின்பு; "அடியேன் தங்களுடன் கூடியிருந்து தாங்கள் பாடும் பாடல்களை யாழில் இசைக்க அருள்புரிதல் வேண்டும்" என்று கேட்டார். அதற்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஒப்புக் கொண்டார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநீலகண்ட பெரும்பாணரும் அடியார்கள் பலரும் ஒருநாள் திருநெல்லாயிரத்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானைத் தரிசிக்க விரும்பி திருத்தூங்கானை மாடம் என்னும் ஆலயத்தில் இருந்து புறப்பட்டனர். ஞானசம்பந்தப் பெருமான் தந்தையாரின் தோழில் மேல் ஏறி இருந்து செல்வதை விரும்பாது அடியவர்களுடன் கால்நடையாகச் சென்றார். அவரது பூப்போன்ற பாதங்கள் கற்கள் பட்டுப் புண்ணாகின. அதைக் கண்ட சிவபெருமான் மனம் வருந்திக் கோயிலிலே இருக்கின்ற பிராமணர்களின் கனவிலே தனியாகத் தோன்றி; "எனது மைந்தன் என்னைத்

தரிசிக்க கால்நடையாக வருகின்றான். அவனது பொற்பாதங்கள் புண்ணகிவிட்டன. நீங்கள் முத்துச்சிவகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னங்களையும் நம்மிடத்திலே வந்து எடுத்தச் சென்று அவனை அழைத்து வாருங்கள்” என்று சொல்லி மறைந்தார்.

விழித்தெழுந்த பிராமணர்கள் கோயிலுக்குள்ளே சென்றபோது அங்கே முத்துச்சிவிகையும், முத்துக்குடையும், முத்துச்சின்னங்களும் இருந்தன. அவற்றை எடுத்துச் சென்ற பிராமணர்கள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைச் சந்தித்து நடந்தவற்றைச் சொல்லி அவரை முத்துச்சிவிகையில் ஏற்றி முத்துக்குடை பிடித்துச் சுமந்து வந்தனர். திருஞானசம்பந்தர் கோயிலை அடைந்து சிவனை வணங்கிப் பதிகம் பாடினார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சிவத்தலங்களையும் தரிசிக்க எண்ணி முத்துச்சிவிகையில் ஒவ்வொரு தலமாகச் சென்று கொண்டிருந்தார்.

ஒவ்வொரு தலங்களிலும் சிவனடியார்கள் கூட்டம் கூட்டமாக கூடிநின்று சம்பந்தப் பெருமானையும், அவருடன் கூட வந்த அடியார்களையும் பெருமகிழ்வுடன் வரவேற்றனர். வீட்டு வாசல்களில் மங்கலமான கும்பங்கள் வைத்தனர். வீதிகள் யாவும் தோரணங்களாலும், வாழைகளாலும், மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டன. அதைப் பார்த்த சிவபாதவிருதயர் பெரு மகிழ்வுற்றார். இனிச் சைவமும் தமிழும் வளரும் என்று நினைத்தார்.

மழலை நாட்டிலே வாழ்ந்த கொல்லி மழவன் என்ற சிவனடியார் தனது மகளுக்கு முயலகன் என்ற மாறாத நோய் வந்தமையால் வருத்தமுற்றுத் திருப்பாலாச்சிக் கிராமத்தில் உள்ள சிவத்தலத்தில் அவளைக் கொண்டு சென்று விட்டுத் தானும் இருந்து பரமசிவனைத் தொழுது கொண்டிருந்தான். முத்துச்சிவிகையில் வந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், முத்துச்சிவிகையால் இறங்கிக் கோயிலுக்குள்ளே சென்றபோது ஒரு கன்னிப்பெண் அறிவு கெட்டு நிலத்திலே கிடப்பதைக் கண்டார்.

அவளுக்குக் கிட்டச் சென்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், அவளின் நோயைக் கண்டு இரங்கி சுவாமியை வணங்கி; “தணிவளர் திங்கள்” என்ற திருப்பதிகத்தைப் பாடினார். பதிகம் பாடி முடிந்ததும் அப் பெண் நோய் நீங்கி எழுந்தாள். அதைக் கண்ட கொல்லி மழவன் மகிழ்ந்து திருஞானசம்பந்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அவனது புத்திரியும் வீழ்ந்து வணங்கினாள்.

அதன்பின் திருக்கொடி மாடச் செங்குன்றூருக்குச் சுவாமி தரிசனம் செய்ய அடியார் கூட்டத்துடன் திருஞானசம்பந்தர் சென்றார். அங்கே தங்கியிருக்கும்போது மழைக்காலம் முடிந்து பனிக்காலம் தொடங்கியது. அதனால் அடியார்கள் சளிச்சுர நோயால் பீடிக்கப்பட்டு மிகவும் வருந்தினார்கள். அதைக் கண்டு மனம் வருந்திய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இறைவனிடம் முறையிட்டுச் சளிச்சுரத்தை நீக்கியருளுமாறு வேண்டி "அவ்வினைக் கிவ்வினை" என்னும் திருநீலகண்ட பதிகத்தைப் பாடினார். உடனே சிவனடியார்களுக்கு மட்டுமன்றி அந்நாட்டில் உள்ள அனைவரையும் வாட்டிய பனிப்பிணி அகன்றது.

இதை அறிந்த சிவனடியார்கள் மனம் மகிழ்ந்தனர். அவ்வூரில் வாழ்ந்த மக்கள் சிவனே ஞானக்குழந்தையாக வந்து பிறந்துள்ளான். அதனால் எம்மை வாட்டிய துன்பங்கள் யாவும் நீங்கும். சைவமும் மேம்படும் என மகிழ்ந்தனர்.

அடியார் கூட்டத்துடன் திருஞான சம்பந்தர் திருச்சக்தி முற்றத்துச் சிவனைத் தரிசித்துக் கொண்டு திருப்பட்டீச்சரத்திற்குச் சென்றார். அப்பொழுது பகற்காலமாதலால் வெய்யில் சுட்டெரித்தது. திருஞான சம்பந்தரும் அடியார்களும் வெய்யில் கொடுமையால் துன்பப்படுவதைக் கண்ட சிவபெருமான் சிவபூதங்களை அனுப்பி அவர் வரும் பாதை முழுவதற்கும் முத்துப்பந்தல் அமைத்து வெய்யிலைத் தடுப்பித்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாவடுதுறையிலே சுவாமி தரிசனம் செய்து கொண்டிருக்கும் நாளில் ஒரு நாள் சிவபாதவிருதயர் தனது மகனின் அருகே சென்று; "நான் யாகம் ஒன்றைச் செய்ய விரும்புகின்றேன். அதற்கான பொருளைத் தரல் வேண்டும்" என்று சொன்னார்.

அதைக்கேட்ட திருஞானசம்பந்தர் இறைவனை வணங்கி "இடரினும் தளரினும்" என்ற திருப்பதிகத்தைப் பாடினார். அப்பொழுது பரமசிவனது அருளினாலே ஒரு பூதம் அங்கு வந்து பீடத்திலே ஆயிரம் பொன்னைக் கொண்ட ஒரு முடிச்சை வைத்துவிட்டு மறைந்தது.

சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தருமபுரத்தை அடைந்தார். அவ்வூர் திருநீலகண்டப் பெரும்பாணரது தாயார் பிறந்த ஊர். அதனால் திருநீலகண்டப் பெரும்பாணரது உறவினர்கள் அங்கு வந்து அவரையும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரையும் தரிசித்து வணங்கினர்.

திருநீலகண்டப் பெரும்பாணர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பதிகங்களை யாழில் இட்டுப் பாடுவதால் உலகம் முழுவதும் இசை விளங்குகிறது” என்று திருநீலகண்டப் பெரும்பாணரது சுற்றத்தவர்கள் சொன்னார்கள்.

தனது சுற்றத்தவர்கள் தன்னை உயர்த்திப் பேசுவதைத் திருநீலகண்டப் பெரும்பாணர் விரும்பவில்லை. சிவனருளால் பிறந்து அழிந்து கொண்டிருக்கும் சைவசமயத்திற்குப் புத்துயிரழித்து மதம்மாறியவர்களை மீண்டும் சைவசமயத்தவர்களாக மாற்றிய சம்பந்தரது பெருமைகளை உணராது தனது இனத்தவர்கள் பாசத்தின் நிமிர்த்தம் அவ்வாறு கூறுவதை நினைத்துப் பதைபதைத்த திருநீலகண்டப் பெரும்பாணர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரிடம் சென்று; “சுவாமி திருப்பதிக இசை யாழில் அடங்காத தன்மையை இவர்களும் உலகத்தில் உள்ள மற்றவர்களும் அறியும் பொருட்டு ஒரு திருப்பதிகம் பாடி அருளல் வேண்டும்” என்று இரந்தார்.

திருஞானசம்பந்தர் பரமசிவனை வணங்கி; “மாதர் மதப்பிடி” என்னும் திருப்பதிகத்தைப் பாடப் பெரும்பாணர் அதை யாழில் இட்டு வாசித்தார். அப்பதிகம் யாழிலே அடங்கவில்லை. அதனால் மனம் வருந்தி யாழ் வாசிப்பதை விட்டெழுந்த பெரும்பாணர் சம்பந்தரை வணங்கிவிட்டு; “இந்த யாழ் தான் சுவாமி அருளிச் செய்த பதிகங்களைத் தன்னுள் அடக்குவேன் என்று மற்றவர்களைச் சொல்லப் பண்ணியது. அதனால் இதை உடைத்தல் வேண்டும்” என் கையில் இருந்த யாழை உடைக்க ஓங்கினார்.

உடனே சம்பந்தர் அதனைத் தடுத்து; “அன்பரே நீர் இந்த யாழை உடைப்பதால் என்ன பயன் உண்டாகும்…? எல்லாம் வல்ல எம்பெருமானின் சக்தி இந்த யாழுள் அடங்குமா..? யோசித்துப் பாரும் நீர் இந்த யாழை உடையாது எம்பெருமானின் புகழை இயன்றவரை இவ்யாழில் இட்டு வாசியும்” என்றார். பெரும்பாணர் மகிழ்ந்து சம்பந்தரைத் தொழுதார்.

திருநீலகண்டப் பெரும்பாணரின் உறவினர்கள் உண்மையை உணராது சிவனின் மைந்தனைக் குறைத்து மதிப்பிட்டு விட்டோமே என வருந்திச் சம்பந்தரிடம் மன்னிப்புக் கோரினர். சம்பந்தப் பெருமான் அவர்களை மன்னித்துத் தான் செல்லும் திருத்தலங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்றார்.

அதன்பின் திருமருகல் என்னும் சிவத்தலத்திற்கு அடியவர்களுடன் திருஞானசம்பந்தர் சென்றார். அவ்வாலய மடத்தில் ஒரு வணிகன் கன்னி ஒருத்தியுடன் இரவைக் கழிப்பதற்காகத் தங்கியிருந்தான். அவன் நித்திரையாக இருந்த சமயம் நாகம் ஒன்று அவனைத் தீண்டியதால் அவன் மரணம் அடைந்தான். அக் கன்னிப்பெண் ஆலயவாசலில் வணிகனைக் கிடத்திவிட்டுப் புலம்பி அழுதாள்.

மக்கள் அப்பிரேதத்தைச் சூழ்ந்து நின்றனர். அப் பெண்ணின் துயரத்தைக் கண்டு இரங்கினர். அவர்கள் சம்பந்தப் பெருமானிடம் சென்று ஒரு கன்னிப் பெண்ணோடு துணையாக வந்தவனும் சிவன்கோவிலில் இரவு தங்கியபோது அவனை நாகம் தீண்டிவிட்டது. இது பெரும் பாதகமான செயல். சிவனே என்று தஞ்சமடைந்தவனைச் சிவனின் கழுத்தில் வீற்றிருக்கும் நாகம் தீண்டியதை அறிந்தால் சமணர்களை எம்மைப் பழிப்பர். அதனால் தாங்கள் சிவனருள் பெற்றவர். இதற்கு ஒரு நல்ல தீர்வு காணுங்கள்" என்றனர்.

அவள் அழுவதைக் கண்ட திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அவளின் அருகே சென்று; "நடந்தது என்ன?" என்று கேட்டார்.

"சுவாமி, வைப்பூரில் இருக்கின்ற தாமன் என்னும் பெயரையுடைய எனது தந்தைக்கு ஏழு புத்திரிகள் இருந்தனர். அவர்களில் என்னைத் தவிர மற்றைய ஆறு பெண்களையும் தனது மருமகனான இவருக்குத் திருமணம் செய்து கொடுப்பேன் என்று சொல்லிச் சொல்லி ஒவ்வொருவரையும் பணக்கார வணிகர்களுக்கு விற்றுவிட்டார். அதனால் இவர் மனத்துக்கம் அடைந்தார். இவரது மனவேதனையைப் போக்குவதற்காக எனது தந்தைக்குத் தெரியாமல் நான் இவருடன் புறப்பட்டு வந்து இரவு இம்மடத்தில் தங்கியபோது நாகம் தீண்டி இவர் இறந்து விட்டார்" என்றாள்.

திருஞானசம்பந்தர் விடம் நீங்கும்பொருட்டு திருமருகற் கடவுள்மேல், "சடையாயெனுமால்" என்னும் திருப்படிகத்தைப் பாடி அருள வணிகன் உயிர் பெற்று எழுந்து சம்பந்தரை வணங்கினான். அப் பெண் மனம்மகிழ்ந்து சம்பந்தரின் பாதங்களைப் பற்றிப்பிடித்து வணங்கினாள்.

பெண்ணுடன் கூட வந்தவன் உயிர்த்து எழுந்ததும் அவ்வூரவர்கள் மிகவும் மகிழ்ந்தனர். சம்பந்தனைப் போற்றி வணங்கினர். அப்போது திருஞானசம்பந்தர் அங்கிருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்ட திருநாவுக்கரசு நாயனார் அத்திருக்கோவிலுக்கு வந்து சம்பந்தரைக் கண்டு மகிழ்ந்தார். குழந்தையான சம்பந்தரைத் தூக்கி முத்தமிட்டு வாழ்த்தினார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அப்பருடன் சுவாமி தரிசனம் செய்து கொண்டு திருவீழிமழலையில் இருந்தார். அப்போது மழையின்மையால் காவேரி நதி வற்றியது. அதனால் நாட்டில் பஞ்சம் உண்டாகியது. மக்கள் பசிக்கொடுமையால் அல்லற்பட்டனர். மக்கள் பசியால் துன்பப்பட்டதால் சிவனடியார்களுக்கு அமுதளித்து அவர்களின் பசித்துன்பத்தைப் போக்க இயலாது வருத்தமுற்றனர்.

அவர்கள் திருஞானசம்பந்தரிடம் வந்து அவரை வணங்கி; "சுவாமி நாம் எமது கோவிலைத் தரிசிக்க வரும் சிவனடியார்களுக்கு உணவும், உடையும், பிச்சாபாத்திரமும், கமண்டலமும் கொடுத்து வரவேற்போம். அவர்கள் பலநாட்களுக்கு இங்கு தங்கியிருந்து சிவசேவை செய்வர். தற்பொழுது பஞ்சம் ஏற்பட்டமையால் ஊர் மக்களே உணவின்றித் துன்பப்படுகின்றனர். அதை அறிந்த சிவனடியார்கள் இப்போது சிவனைத் தரிசிக்க வருவதில்லை. நெடுநாட்களுக்குப் பின் தாங்களும் பல சிவனடியார்களும் வந்துள்ளீர்கள். அது எமக்குப் பெரும் மகிழ்வைத் தந்தபோதும் உங்களுக்கு நல்ல சுவையான உணவு வகைகளைத் தரமுடியவில்லை. அது எமக்குப் பெரும் துன்பத்தைத் தருகிறது. அத்துடன் சிவனுக்கு அணிய மாலைகள் பெற முடியாதுள்ளது. மரங்கள் யாவும் பட்டமையால் நாம் தேவாரங்கள் பாடியே சிவனைத் துதிக்கின்றோம். அதனால் பெரும் துன்பப்படுகின்றோம். இதை நீக்கியருளுங்கள்" என்றனர்.

இதனால் மிகவும் வருந்திய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் இறைவனிடம் முறையிட்டுவிட்டுப் படுத்துறங்கினர். அன்றிரவு இறைவன் அவர்களது கனவில் தோன்றி; "மழை பெய்யாமையால் நாட்டில் பஞ்சம் தலைதூக்கியுள்ளது. மக்களும், சிவனடியார்களும் படும் துன்பத்தைக் கண்டு நீவிர் இருவரும் கவலைப்படுவதால் இக்கொடிய பஞ்சம் நீங்கும் வரைக்கும் கோவிலின் கிழக்குப்பீடத்திலும், மேற்குப் பீடத்திலும் ஒவ்வொரு காசு உங்களுக்குத் தருகிறோம்" என்று சொல்லி மறைந்தார்.

விழித்தெழுந்த நாயன்மார் இருவரும் கிழக்குப்புறமாக உள்ள பீடத்திற்குச் சென்றனர். பீடத்திலே காசு இருக்கக்கண்டு மிகவும் மகிழ்ந்து இறைவனை வணங்கினர். கிழக்குப் பீடத்திலுள்ள காசை சம்பந்தர் எடுத்தார். பின் மேற்குப்பீடத்திற்கு இருவரும் சென்றனர். மேற்குப்பீடத்திலும் காசு இருந்தது. அதை அப்பர் எடுத்தார். இருவரும் மக்களையும், சிவனடியார்களையும் அழைத்து உணவளித்தனர்.

அப்பரது மடத்தில் நேரத்துக்கு உணவு கொடுக்கப்பட்டது. ஆனால் சம்பந்தரின் மடத்தில் உணவு கொடுப்பது சற்று தாமதமாகியது. அதனால் கவலை கொண்ட சம்பந்தர் மடத்திற்குப் பொறுப்பானவர்களை அழைத்து; “ஏன் நீங்கள் அடியவர்களுக்கு உணவைத் தாமதமாகக் கொடுக்கிறீர்கள்” என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் “தேவரீர், தாங்கள் கடவுளிடம் தினமும் பெறும் படிக்காசைத் தினமும் பண்டம் வாங்குவதற்குக் கொண்டு சென்றால் வாசி கேட்கிறார்கள். அப்பர் மூர்த்தியின் காசுக்கு வாசி கேட்பதில்லை” என்றனர்.

அதைக்கேட்ட சம்பந்தர் இறைவனை வேண்டி; “வாசி தீரவே காசு நல்கிடீர்” என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். அதன்பின் கிழக்குப்புறப்பீடத்தில் வைத்த காசுக்கு வணிகர் வாசி கேட்பதில்லை.

அதன்பின் அடியவர்கள் தினமும் சுவையான உணவு வகைகளை மகிழ்வுடன் உண்டனர். சில நாட்களில் மழை பெய்தமையால் பஞ்சம் நீங்கியது. அடியார்கள் அதன்பின் தமது உழைப்பில் உணவினை உண்டு மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

அப்பரும் சம்பந்தரும் சிவத்தலங்கள் பலவற்றைத் தரிசித்து இறைவனை வணங்கிக் கொண்டு வேதாரணியத்தை அடைந்தனர். வேதாரணயக் கதவு பல வருடங்களாக மூடப்பட்டிருந்தது. அதை அறிந்த அப்பரும் சம்பந்தரும் இறைவனை வணங்கினர். சம்பந்தர் பதிகம்பாட அக்கதவு திறந்தது. பின்னர் அப்பர் பதிகம் பாட அக்கதவு மூடப்பட்டது. அதன் பின் அக்கதவு காலையில் திறக்கப்பட்டு மாலையில் மூடப்பட்டது. அதனால் அடியவர்கள் உள்ளே சென்று சுவாமி தரிசனம் செய்தனர்.

வேதாரணியச் சிவன்கோவில் கதவு பலவருடங்களாகத் திறக்க முடியாதிருந்தமையால் சிவனடியார்கள் உள்ளே சென்று சிவனைத் தரிசிக்காமையால் மிகுந்த கவலை கொண்டிருந்தனர். அக்கதவு இப்போது காலையும் மாலையும் திறக்கப்படுவதால் சிவனடியார்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். சம்பந்தரதும் அப்பரதும் மகிமையால் அக்கதவுகள் தினமும் திறக்கப்படுவதால் சிவனடியார்கள் தினமும் உள்ளே சென்று சிவனைத் தரிசித்தனர்.

பாண்டிய மன்னன் சமணத்துறவிகளின் துர்ப்போதனைகளால் கவரப்பட்டு சத்திய மார்க்கமான சைவத்தைவிட்டுச் சமணசமயத்தில் சேர்ந்தான். “அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி” என்ற பழமொழிக்கிணங்க மக்களும் சமண சமயத்தில் சேர்ந்தனர்.

எனினும் அவனது மனைவியான மங்கையற்கரசியாரும், மந்திரியான குலச்சிறைநாயனாரும் சைவத்தின் பெருமையை உணர்ந்திருந்தமையால் அவர்கள் சிவபெருமானை வணங்கித் தமது துயரைத் தீர்க்கும்படி கேட்டனர்.

இரவு மங்கையற்கரசியாரின் கனவில் தோன்றிய சிவபெருமான்; "அம்மையே கவலை கொள்ளாதே, சமணத்தை அழித்துச் சைவத்தைக் காக்க எம்மால் அவதரித்த செல்வப் புதல்வன் வேதாரணியத்தில் சிவனடியார்களுடன் தங்கியிருக்கிறான். அவனை அழைத்து வாருங்கள் உங்கள் குறைகள் யாவும் தீரும்" என்று அருளினார்.

வேதாரணியத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தங்கியளிருக்கின்றார் என்ற செய்தியை அறிந்த குலச்சிறை நாயனார் அதை மங்கையற்கரசிக்குச் சொன்னார். ஞானசம்பந்தரின் பெருமைகளைக் கேள்விப்பட்டிருந்த மங்கையற்கரசியார் ஏவலாளர்கள் இருவரை அழைத்து திருஞானசம்பந்தரிடம் அனுப்பினார்.

ஏவலாளர்கள் வேதாரணியத்தை அடைந்து சம்பந்தரைக் கண்டு வணங்கி, "சுவாமி நாம் பாண்டிநாட்டு அரசியாரின் தூதுவர்களாக வந்துள்ளோம். எமது அரசன் சமணர்களுடைய துர்ப்போதனைகளை உண்மையென நம்பி மெய்ச்சமயமான சைவத்தில் இருந்து நீங்கிச் சமணசமயத்தை தழுவிக் கொண்டான். அதனால் பட்டத்தரசியான மங்கையற்கரசியாரும், மந்திரியாகிய குலச்சிறைநாயனாரும் மிகவும் வேதனைப்படு-கின்றனர். அவர்களின் துயரைத் தீர்க்கத் தாங்கள் பாண்டிய நாட்டிற்கு வருகை தரல் வேண்டும்" என்றார்.

"கவலைப்படாதீர்கள் உங்கள் அரசியாரினதும், மந்திரியாரினதும் குறையைத் தீர்க்க விரைவில் பாண்டிய நாட்டிற்கு வருவேன். என்று அரசியாருக்கும் மந்திரியாருக்கும் கூறுங்கள்" என்றார் சம்பந்தர்.

ஏவலாளர்கள் மகிழ்வுடன் சம்பந்தரை வணங்கிப் பாண்டிய நாட்டிற்குச் சென்றனர். அப்பொழுது அப்பர், "தேவரீர், தாங்கள் சிறுபிள்ளை. சமணர்கள் மிகவும் கொடியவர்கள். எண்ணில் அடங்காத கொடிய தீமைகளைச் செய்வார்கள். எனவே, தாங்கள் பாண்டிய நாட்டிற்குச் செல்வது நல்லதல்ல" என்றார்.

"பரமசிவன் என்சிந்தையுள் இருப்பதால் எனக்கு எந்தக்கேடும் வராது. அப்பரே, நீர் பயம் கொள்ள வேண்டாம்" என்று கூறி; "வேயுறு தோளி பங்கன்" என்னும் கோளறு பதிகத்தைப் பாடினார். அத் திருப்பதிகத்தைக் கேட்ட அப்பர் மனம்தெளிந்து சம்பந்தர் பாண்டிய நாட்டிற்குச் செல்ல விருப்பம் தெரிவித்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாண்டிய நாட்டிற்கு முத்துச்சிவிகையில் அடியார்கள் புடைசூழ வருகிறார் என்று கேள்விப்பட்ட மங்கையற்கரசியார், குலச்சிறை நாயனாரை அழைத்து சம்பந்தரை எதிர்கொண்டு வரவேற்று அழைத்து வருமாறு கூறினார்.

குலச்சிறை நாயனார் சம்பந்தரை அவ்வூராலய மடத்தில் சந்தித்து வணங்கி, தங்குவதற்கான வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்துவிட்டு அரச மாளிகைக்குச் சென்றார்.

திருஞானசம்பந்தர் வந்து ஆலயமடத்தில் தங்கியிருக்கிறார் என்பதை அறிந்த மங்கையற்கரசியார் பெருமகிழ்வுற்றார். இனிப் பாண்டிய நாட்டு அரசனும் மக்களும் திருந்திச் சைவசமயத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை அவரின் மனதில் எழுந்து நிலைத்தது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆலயமடத்தில் வந்து தங்கியிருப்பதை அறிந்த சமணர்கள் அரசனிடம் ஓடிச் சென்று; "அரசே, தோணியப்பரின் ஆலயத்தில் உமாதேவியாரிடமிருந்து ஞானப்பாலை உண்ட சிறுவன் ஒருவன் எமது சமயத்தை அழிப்பேன் என்று சபதம் இட்டு வந்து மடத்தில் தங்கியுள்ளான். அவனையும் அவனுடன்கூட வந்தவர்களையும் அரண்மனைக்குள் வரவிடக்கூடாது. எனவே, அந்த ஆலயமடத்தை இரவு தீ வைத்துக் கொழுத்துவோம்" என்றனர்.

அரசன் அதற்கு உடன்பட்டான். அன்றிரவு சமணர்களால் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் அடியார்களும் தங்கியிருந்த மடம் தீக்கிரையாக்கப்பட்டது. அதைக்கண்ட சம்பந்தர் இறைவனைத் தொழுது; "செய்யசே திருவாலவாய்" என்ற திருப்பதிகத்தைப் பாடி "அமணர் கொளுவுஞ் சுடர் பையவே சென்று பாண்டியர்க்காகவே" என்று முடித்தார். திருப்பதிகம் பாடி முடித்ததும் அக்கினியின் வெம்மை பாண்டியனைச் சென்றடைந்து வருத்தத் தொடங்கியது.

சமணர்கள் சம்பந்தரும் சிவனடியார்களும் தீயில் வெந்து கருகி இறந்திருப்பார்கள் என்று சமணர்கள் மகிழ்ந்து ஆடிப்பாடிக் கொண்டாடினர். சம்பந்தரும் சிவனடியார்களும் இறந்திருப்பர் என்று நினைத்து அரசனும் மகிழ்ந்தான். அதைக் கேள்விப்பட்ட மங்கையற்கரசியார் பெருந்துயருற்றார். அதைக்கண்ட குலச்சிறையார் சொன்னார்; "அரசியே, சம்பந்தர் சமணர்களை அழிக்கவென்று சிவனால்

பிறப்பிக்கப்பட்டவர். அவருக்கு எந்தக் கேடும் ஏற்பட மாட்டாது. அதனால் கவலை கொள்ளாது இருங்கள்" என்று கூறியபோது ஒற்றன் ஒருவன் வந்து சம்பந்தரும் சிவனடியார்களும் எதுவிதமான துன்பங்களுமின்றி மிகுந்த மகிழ்வுடன் இருக்கிறார்கள்" என்றான். அதைக்கேட்ட மங்கையற்கரசியாரின் துன்பம் பறந்தோடியது.

பாண்டியன் வெப்புநோயினாலே மிகவும் வருந்தினான். சமணர்கள் வந்து தமது வைத்திய முறைப்படி வைத்தியம் செய்தும் மந்திரித்தும் பார்த்தனர். அதனால் நோய் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. அதனால் கோபமுற்ற பாண்டிய அரசன்; "நீங்கள் செய்த வைத்தியம் எதுவும் இதுவரை பயனளிக்கவில்லை. மந்திரம் ஜெபித்தும் குணமாகவில்லை. எனவே இவ்விடத்தைவிட்டுச் சென்று விடுங்கள்" என்று கூறி மயக்கம் அடைந்தான்.

பாண்டிமாதேவி பயந்து குலச்சிறை நானாரை நோக்கி; "இரவு சமணர்கள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்குச் செய்த கொடுமைதான் அரசருக்கு நோயாக வந்து சேர்ந்துவிட்டது. எனவே திருஞானசம்பந்தரால்தான் இந்நோய் நீங்கும்" என்றார்.

மயங்கிக்கிடந்த அரசனின் செவியுள் இவ்வார்த்தைகள் புகுந்தன. அதனால் மயக்கம் தீர்ந்து எழுந்த அரசன் மனைவியைப் பார்த்து; "என்னால் நோயின் கொடுமையைத் தாங்க முடியவில்லை. விரைந்து சென்று சம்பந்தரை அழைத்து வாருங்கள். அவர் எனது நோயைத் தீர்த்தால் உடனே நான் சைவ சமயத்தவனாக மாறுவேன்" என்றான்.

மங்கையற்கரசியார் அது கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். பின் சிவிகையில் ஏறிக் குலச்சிறை நாயனாருடன் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தங்கியிருக்குமிடத்திற்குச் சென்று அவரைக் கண்டு வணங்கினார். பின்பு; "சுவாமி அறியாமையால் எனது கணவர் சமணர்களுடன் சேர்ந்து தங்களுக்குச் செய்த கொடுமைகளை மறந்து சைவசமயம் வளரவும், சமணம் அழியவும் கிருபை செய்தல் வேண்டும். அத்துடன் எனது கணவரை ஆட்டும் கொடிய வெப்புநோயையும் நீக்கியருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்.

சம்பந்தர் மங்கையற்கரசியாரைக் கனிவுடன் நோக்கி; "அஞ்ச வேண்டாம். நான் சமணரை வாதில் வென்று பாண்டியனைச் சைவ சமயத்தவன் ஆக்குவேன்" என்றார்.

அதைக்கேட்டு மகிழ்ந்த மங்கையற்கரசியாரும் குலசசிறைநாயனாரும் திருஞானசம்பந்தரின் பாதங்களைப் பணிந்து; "சுவாமி எங்களுடன் தாங்கள் அரண்மனைக்கு எழுந்தருளல் வேண்டும்" என்று சொல்ல, திருஞானசம்பந்தர் அதற்கு ஒப்புக் கொண்டார். மங்கையற்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் முன்னே செல்ல திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் சிவனடியார்களும் அவரின் பின்னே சென்று பாண்டிய மன்னனின் அரண்மனையை அடைந்தனர்.

மன்னனைக் கேளாது திருஞானசம்பந்தரையும் சிவனடியார்களையும் அழைத்து வந்ததையிட்டு மனம் கலங்கிய மங்கையற்கரசியார் பின்பு சிவனை நினைத்துக்கொண்டு மன்னனின் அருகில் சென்று; "சுவாமி சம்பந்தர் சிறுபிள்ளை. சமணர்கள் பலர் வயது வந்தவர்கள்; அவர்களால் அச்சிறுபிள்ளைக்கு ஆபத்து நேர்ந்தால் எமது குலத்திற்கே அவமானம்" என்று நடுங்கியபடி கூறினார்.

மங்கையற்கரசியாருக்குத் திருஞானசம்பந்தரைப் பற்றித் தெரியும். அவர் உமாதேவியாரின் கையினால் பாலூட்டப் பெற்றவர். அத்துடன் சிவன் தனது மைந்தன் என்று கூறியிருக்கிறான். அதனால் சிறுபிள்ளையானாலும் சம்பந்தருக்கு யாராலும் எந்தக் கெடுதியும் வராதென்றும் தெரியும். ஆனால் கணவனுக்குச் சொல்லாது அவர்களை அழைத்து வந்ததாதல் ஏதும் விபரீதமாகக் கணவன் நடந்துவிடுவானோ என நினைத்தார்.

அதைக்கேட்டுச் சிரித்த ஞானசம்பந்தர்; "அன்னையே, வீணாகப் பயப்பட வேண்டாம். எம்மையாளும் சிவன் எம்மைக் கைவிடமாட்டான்" என்று கூறி "மானினேர் விழி மாதராய்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த பாண்டியன்; "நீங்கள் என்னுடைய நோயைத் தீருங்கள். தீர்த்தவர் எவரோ, அவரே வாதில் வென்றவராவார்" என்றான்.

அது இலேசான செயல் என்று நினைத்த சமணர்கள் மிக்க மகிழ்வடைந்து; "மகாராஜாவே நாம் உமது உடலில் இடப்பாகத்தில் உள்ள நோயைத் தீர்க்கிறோம். சம்பந்தர் வலப்பக்க நோயைத் தீர்க்கட்டும்" என்று கூறி, அரசனின் இடப்பாகத்தை மயிர்ப்பீலியினால் தடவினார்கள். அரசனின் நோய் அதிகரித்தது. சம்பந்தர் வீபூதியை எடுத்து அரசனின் வலப்பாகத்தில் பூசிவிட்டு, "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடினார். உடனே மன்னனின் வலப்பக்கம் குளிர்ந்து நோய் அகன்றது. இடப்பாகத்தில் நோய் அதிகரித்தமையால் வருந்திய பாண்டிய மன்னன் சம்பந்தரை

நோக்கி, “சுவாமி, இடப்பாக நோயை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதையும் தாங்களே தீர்த்து வையுங்கள்” என்று இரந்தான். சம்பந்தர் வீபூதியை எடுத்து மன்னனின் இடப்பாகத்திலும் பூச இடப்பாகத்து நோயும் தீர்ந்தது. மன்னன் அளவில்லாத மகிழ்வுடன் சம்பந்தரைத் தொழுதான்.

“சமணர்களே, இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள்” என்று கேட்டான் மன்னன். சமணர்கள் பயத்தால் நடுநடுங்கினர். மன்னன் என்ன தண்டனை தரப்போகிறானோ என்று கலங்கினர்.

அப்போது சம்பந்தர் சமணர்களை நோக்கி; “உங்கள் சமய உண்மைகளை என்னுடன் வாதிக்கத் தயாரா?” என்று கேட்டார்.

அதற்குச் சமணர்கள் “வாதிடத் தேவையில்லை; இரு சமய உண்மைகளையும் ஏட்டிலே எழுதித் தீயில் இடுவோம். எந்த ஏடு தீயில் எரியாமல் இருக்கிறதோ அந்த ஏட்டுக்குரிய சமயமே மெய்ச்சமயம் எனக் கொள்வோம்” என்றனர்.

சம்பந்தர் அதற்கு உடன்பட்டார். பின் இறைவனை வணங்கித் தான் கொண்டு வந்த ஏட்டுக்கட்டை விரித்து அதிலிருந்து ஓர் ஏட்டை எடுத்தார். அதில்; “போக மார்ந்த பூண் முலையாள்” என்னும் திருப்பதிகம் இருந்தது. சமணர்கள் ஓர் ஏட்டை எடுத்துத் தமது சமய உண்மைகளை அதில் எழுதினார்கள்.

மன்னரின் உத்தரவின் பெயரில் அரண்மனைக்கு வெளியே பெரும் தீமூட்டப்பட்டது. மக்கள் பலர் தீயைச் சுற்றி நின்றனர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தீயை வலம் வந்து ஏட்டை அத்தீயில் இட்டார். அவ்வேடு கொழுந்து விட்டெரியும் நெருப்பில் எரியாது பச்சைப் பசேல் என இருந்தது. சமணர்கள் தமது கடவுளை வணங்கித் தமது சமய உண்மைகளை எழுதிய ஏட்டைத் தீயில் இட்டனர். இட்ட மாத்திரத்தே அது தீயில் எரிந்து சாம்பரானது.

சமணர்கள் நடுநடுங்கினர். தமது சமயத் தத்துவங்கள் பொய்யானவையா என்று நினைத்துக் கலங்கினர். இவ்வளவு காலமும் சுகபோக வாழ்வு வாழ்ந்த நாம் இனிச் சிறையில் வாட வேண்டியது தான் என நினைத்துப் பயந்தனர்.

உடனே அரசன் சமணரைப் பார்த்து; “இனியும் இங்கே தங்கியிராது ஓடிச் செல்லுங்கள். எனது வெப்புநோயை நீக்கியமையாலும், ஏட்டைத் தீயில் இட்டபோது

அது எரியாமையினாலும் சம்பந்தர் வாதில் வென்றவராவார். அத்துடன் சைவசமயமே மெய்ச்சமயம்" இனி விவாதிக்க இடமில்லை. ஓடித்தப்புங்கள். "இல்லாவிட்டால் கழுவேற்றப்படுவீர்கள்" என்றான்.

அதற்குச் சமணர்கள்; "முன்பு இருமுறை வாது செய்தோம். இன்னொருமுறை வாது செய்ய அனுமதித்தல் வேண்டும்" என்றனர்.

அதைக் கேட்ட பாண்டிய மன்னன் நகைத்து; "இனி என்னவாது செய்யப் போகிறீர்கள்" என்று கேட்டான்.

"இரு சமயத்தினரும் தத் தமது சமய உண்மைகளை ஏட்டில் எழுதிக் கங்கையாற்றில் இடுவோம். எந்த ஏடு பாயும் நீரை எதிர்த்துச் செல்கிறதோ அந்த ஏட்டைச் சார்ந்த சமயமே மெய்ச்சமயம்" என்று சமணர் கூறினர்.

பாண்டிய மன்னன் கேலியாகச் சிரித்தான். தெரியாத்தனமாக உங்களது வஞ்சகச் சூழ்ச்சியில் விழுந்து அவதிப்பட்டேன். நல்லவேளை சிவனருளால் சம்பந்தப் பெருமான் வந்து காப்பாற்றினார். இருப்பினும் தர்மப்படி இன்னொருமுறை வாதிடச் சந்தர்ப்பம் தருகிறேன்" என்றான்.

அதற்கு உடன்பட்ட திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வைகையாற்றங்கரைக்குச் செல்லத் தயாரானார். அப்பொழுது அரசன்; "இவ் வாதில் தோற்றவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும். என்ன தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று சமணரே சொல்லட்டும்" என்றான்.

"தோற்றவர்களைக் கழுவில் ஏற்றுங்கள்" என்று சமணர்கள் கூறினர். சமணர் எல்லோரும் வைகை ஆற்றங்கரையை அடைந்தனர். திருஞானசம்பந்தரைக் கண்டதும் வைகைநதி மகிழ்வுற்று பொங்கிப் பூரித்து அணை கடந்து பாய்ந்தது.

சமணர்கள் தாம் எழுதிய ஏட்டைத் தமது கடவுளை வணங்கி வைகையாற்றில் இட்டனர். இட்ட மாத்திரத்தே அது வெள்ளத்தில் அடிபட்டு கடலை நோக்கித் தலைகீழாக உருண்டு புரண்டு சென்றது. சமணர்கள் செய்வதறியாது கலங்கி நின்றனர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், இறைவனை வணங்கி “வாழ்க அந்தணர்” எனும் திருப்பதிகத்தைப் பாடி, அதை ஏட்டில் எழுதி வைகை நதியில் இட்டார். அத்திருவேடு வைகைநதியை எதிர்த்துப் பாய்ந்துவரும் வெள்ளத்தைக் கிழித்துக் கொண்டு எதிர்த்திசையாகச் சென்றது. வைகையில் இட்ட ஏட்டில் “வேந்தனும் ஓங்குக” என்று ஞானசம்பந்தர் எழுதியமையால் நெடு நாட்களாகக் கூனியிருந்த பாண்டிய மன்னனது கூன் நீங்கியது.

மக்கள் ஆரவாரித்தனர். சிவனையும் மன்னனையும் வாழ்த்தினர். சம்பந்தரை முத்துப்பல்லக்கில் ஏற்றிக் கோவிலைச் சுற்றி வந்தனர். சிவபாதவிருதயர் தனது எண்ணம் நிறைவேறி வருவதையிட்டுப் பெருமகிழ்வு கொண்டு சிவனை வாழ்த்தினார்.

மன்னன் சமணர்களைக் கழுவேற்றினான். மன்னன் சைவனானதும் மக்கள் எல்லோரும் அவனைப் பின்பற்றிச் சைவர்களாயினர். பாழடைந்த திருக்கோயில்களை மன்னன் புனருத்தாரணம் செய்து நித்திய பூசைகள் செய்வதற்கான ஒழுங்கினைச் செய்தான். மக்கள் மிகுந்த மகிழ்வுடன் கோவிலுக்கு வந்து வணங்கத் தொடங்கினர். நாடு செழிக்க மழை பெய்தது.

பின் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இராமேஸ்வரத்திற்கு வந்து அங்கே சில நாட்கள் தங்கியிருந்தார். அப்பொழுது ஈழமண்டலத்திலே கோயில் கொண்டிருக்கும் திருக்கோணேஸ்வரத்தானைப் பற்றியும், திருக்கேதீச்சரத்தானைப் பற்றியும் திருப்பதிகங்கள் பாடினார். சம்பந்தப் பெருமான் இலங்கையில் உள்ள இரு சிவன்கோவில்களுக்கும் வருகை தரவில்லை. எனினும் அக் கோவில்களின் பெருமைகள் அனைத்தையும் தமது தேவாரங்களில் புகழ்ந்து பாடியமை வியப்புக்குரியது.

அதன்பின் திருஞானசம்பந்தரும் சிவனடியார்களும் திருத்தெளிச்சேரியை அடைந்து சுவாமியை வணங்கிவிட்டுச் செல்லும்போது பதிகங்கள் பாடிக் கொண்டும்; சங்கு ஊதிக்கொண்டும்; மேளங்கள் அடித்துக் கொண்டும் சென்றனர். அவ்வழியில் ஒரு பௌத்ததலம் இருந்தது. அங்குள்ளவர்கள் அம்மங்கல ஒலியைக் கேட்டு கோபித்துத் தமது மதத்தலைவரான புத்த நந்திக்குச் சொன்னார்கள். புத்தநந்தி கடும் கோபத்துடன் வந்து சிவனடியார்களைத் தாக்கினார். அதைப் பொறுக்க முடியாத திருஞானசம்பந்தர் இறைவனை நினைத்துப் பதிகம் பாடி; “புத்த நந்தியின் தலையில் இடிவிழக் கடவது” என்றார். உடனே வானத்தில் இடிஇடித்து புத்த நந்தியின் தலைமேல் விழுந்தது. இதைக் கண்டு பயந்தோடிய பௌத்தர்கள் தமது குருவான அரிபுத்தருக்குச் சொன்னார்கள்.

அரிபுத்தன் சம்பந்தப் பெருமானைச் சந்தித்து வாதிற்கு அழைத்தான். சம்பந்தர் வாதிற்குச் சம்மதித்து அரிபுத்தனை வாதில் வென்றார்.

பின் திருஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகளைக் காணும் ஆசையால் திருப்பூந்துருத்திக்குச் சென்றார். அதைக் கேள்விப்பட்ட அப்பர் திருஞானசம்பந்தரைத் தேடி வந்து அடியாரோடு அடியாராகச் சேர்ந்து திருஞானசம்பந்தர் ஏறிவந்த முத்துச்சிவிகையைச் சுமந்து வந்தார். சம்பந்தர் திருப்பூந்துருத்திக்கு வந்து; "அப்பர் எங்குள்ளார். அழைத்து வாருங்கள்" என்று சொல்ல, அப்பர் அதைக்கேட்டு மகிழ்ந்து; "அடியேன் தங்களது முத்துச்சிவிகையைச் சுமக்கிறேன்" என்று கூறச் சம்பந்தர் பதைபதைத்துச் சிவிகையால் இறங்கி, அப்பரது பாதங்களைப் பணிந்து; வயதில் மூத்த சிவத்தொண்டனான தாங்கள் என்னைச் சிவிகையில் வைத்துச் சுமக்கலாமா...?" எனக் கவலைப்பட்டார். அதனால் கவலைப்பட்ட அப்பர், "மகனே, உனது தந்தை உன்னைத் தனது தோழில் சுமந்து கோவில்களுக்கு அழைத்துச் சென்றார். அப்பரான நான் உன்னைச் சிவிகையில் வைத்துச் சுமக்கிறேன் இரண்டும் வேறல்ல" என்றார்.

அப்பருடன் சம்பந்தர் பல திருத்தலங்களுக்குச் சென்று பதிகம் பாடி வணங்கிக் கொண்டு திருவோத்தூருக்கு வந்தார். அத்திருத்தல்தில் உள்ள சிவனடியாரின் தோப்பில் உள்ள பனைகள் எல்லாம் ஆண்பனைகளாகவே இருந்தன. அதனால் சமணர்கள் அவரை பரிகாசம் செய்தனர். அச்சிவனடியார் திருஞானசம்பந்தரை வணங்கி, "சுவாமி எனது தோப்பில் உள்ள பனைமரங்கள் யாவும் ஆண்பனைகளாகவே உள்ளன. அத்துடன் நான் நடும் பனைகளும் ஆண்பனைகளாகவே வளர்கின்றன. இதனால் என்னைச் சமணர்கள் பரிகசிக்கின்றனர். தேவரீர் வந்து எனது ஆண்பனைகளைக் காய்க்கச் செய்தருளல் வேண்டும்." என்று சொன்னார்.

சம்பந்தர் தோப்பினில் உள்ள பனைமரங்களைப் பார்த்தார். அப்பனைகள் வானைநோக்கி மிகவும் உயரமாக வளர்ந்திருந்தன. ஆயிரக்கணக்கில் நின்ற பனைகள் எதிலும் காய்கள் இல்லை.

சம்பந்தர் இறைவனை வணங்கி; "தேர்ந்தாயன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். அப்பதிகத்தின் இறுதியில் "குரும்பை யாண்பனையீன் குலை போத்தூர்" என்று பாடினார். உடனே ஆண்பனைகள் எல்லாம் குரும்பைக் குலைகளையுடைய பெண்பனைகளாயின.

அதைக்கண்ட சமணர்கள் பயந்து ஓடினர். மக்கள் சம்பந்தரைப் போற்றிப் புகழ்ந்தனர். பனந்தோப்புக்குச் சொந்தக்காரனாகிய அச்சிவனடியார் மகிழ்வோடு சம்பந்தரைத் தொழுதார்.

திருமயிலாப்பூரிலே சிவபக்தியிற் சிறந்தவரும், அடியார்களை மெய்யன்போடு உபசரித்து உணவளித்துக் காப்பவருமான சிவனேசர் என்னும் ஒரு பெரும் செல்வந்தர் வாழ்ந்து வந்தார். அவர் திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட வரலாற்றையும், சமண சமயத்தவரை வாதில் வென்ற வரலாற்றையும் கேள்விப்பட்டு அவரின் மேல் பேரன்புடையவராக இருந்தார். அவருக்குப் பூம்பாவை என்னும் பெயருடைய அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். திருஞானசம்பந்தர் மீதிருந்த அளவில்லாத அன்பு காரணமாகச் சிவனேசர் தன்னையும், தனது திரவியங்களையும், தனது மகளையும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருக்குக் கொடுப்பேன் என்று எல்லோருக்கும் சொல்வார். அதனால் அவருக்குப் பெரும் மகிழ்ச்சியுண்டாகும். ஊரவர்களுக்கு அவர் தானம் வழங்குவார். அடியார்களை வரவேற்று உபசரிப்பார். ஞானப்பாலுண்ட சம்பந்தனே எனது பெண்ணுக்கு மணாளன் என்று சொல்லிப் பெருமைப்படுவார்.

ஒரு நாள் பூம்பாவை நந்தவனத்திற்குத் தனது தோழிகளுடன் சென்று பூப்பறித்தாள். அப்பொழுது நந்தவனத்தில் மறைந்திருந்த பாம்பொன்று அவளைத் தீண்டியது. சிவனேசர் வைத்தியர்களை அழைத்துவந்து வைத்தியம் பார்த்தபோதும் அது பலிக்காததால் அவள் இறந்துவிட்டாள். ஊர் சோகத்தில் ஆழ்ந்தது. திருஞானசம்பந்தப் பெருமானைக் காணலாம் என்ற அவ்வூரவரின் கனவு தரைமட்டமானது. ஊரவர்கள் சிவனேசரின் வீட்டுக்குத் தினமும் சென்று துக்கம் விசாரித்தனர்.

துயர மிகுதியால் அழுது புரண்ட சிவனேசர் அவளது உடலைத் தகனம் செய்து, சாம்பரையும், எலும்புகளையும் ஒரு குடத்தில் இட்டுப் பாதுகாத்து வந்தார்.

ஒருநாள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருமயிலாப்பூருக்கு வந்தார். இதை அறிந்த சிவனேசர் அவரைச் சந்தித்துத் தனது துயர வரலாற்றை எடுத்துச் சொன்னார். அதைக் கேட்ட சம்பந்தர், “உமது மகளது எலும்பு நிறைந்த குடத்தைத் திருக்கோயிலின் வெளி வாசலுக்குக் கொண்டு வாரும்” என்றார்.

அதைக் கேட்டு மகிழ்ந்து வணங்கிய சிவனேசர், மகளின் எலும்பு நிறைந்த குடத்தைத் திருக்கோயிலின் வெளி வாசலிற் கொண்டுவந்து வைத்தார். அதன் அருகில்

வந்த திருஞானசம்பந்தர் இறைவனை வணங்கி, “மட்டிட்ட புன்னை” என்னும் திருப்பதிகத்தைப் பாடி; “பூம்பாவாய் எழுந்து வாராய்” என்றார். உடனே, பூம்பாவை மட்குடத்தில் இருந்து உயிர்பெற்றெழுந்து வந்து சம்பந்தரையும் சிவனேசரையும் வணங்கினாள். தேவர்கள் பூமாரி சொரிந்தனர். அடியார்கள் குதூகலித்து ஆனந்தக் கூத்தாடினர். மக்கள் மிகுந்த மகிழ்வுடன் பூம்பாவையைக் கண்டு ரசித்தனர். முன்னையைவிட அவள் மிகுந்த அழகியாகக் காணப்பட்டாள். வருடம் முழுவதும் அழுது புலம்பியவர்கள் பெருமகிழ்வுற்றுச் சம்பந்தரின் செயலைப் பாராட்டினர்.

சம்பந்தரை வணங்கிய சிவனேசர்; “அடியேன் பூம்பாவை பிறந்தன்றே தங்களுக்குரியவள் என்று நிச்சயித்துவிட்டேன். ஆகையால் தாங்கள் அவளைத் திருமணம் செய்தல் வேண்டும்.” என்று சொன்னார்.

“சிவனேசரே, உமது மகள் என்றோ இறந்து விட்டாள். இப்பொழுது இவள் எனது மகள்” என்றார் சம்பந்தர்.

அதைக்கேட்டு மகிழ்ந்த சிவனேசர் சம்பந்தரை வணங்கிவிட்டுப் பூம்பாவையை அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றார்.

சிவபாதவிருதயரும் அவரது சுற்றத்தவர்களும் ஒன்று கூடித் திருநல்லூரில் இருக்கின்ற நம்பியாண்டார்நம்பி என்பவரின் புத்திரியைத் திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்து வைப்பதெனத் தீர்மானித்தனர். அதற்குச் சம்பந்தரும் ஒப்புக் கொண்டார்.

சுபதினம் ஒன்றிலே திருஞானசம்பந்தருக்குத் திருமணம் நடைபெற்றது. தேவர்கள் பூமாரி சொரிய, பிராமணர்கள் மந்திரங்கள் ஓத, அடியார்கள் பஞ்சாட்சர மந்திரத்தைச் செபிக்க, சிவபெருமானும் உமாதேவியாரும் இடபவாகனத்தில் இருந்து வாழ்த்தத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருமாங்கல்யத்தைக் கட்டினார். பின் மனைவியோடு வேத விதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலம் வந்து “கல்லூர்ப் பெருமணம்” என்னும் பதிகத்தைப் பாடினார். அப்பொழுது கருணாநிதியான சிவபெருமான்; “நீயும் உனது மனைவியும் உனது திருமணச் சடங்கில் கலந்து கொண்டவர்களும் இச்சோதியில் கலந்து நம்மை வந்தடையுங்கள்” என அருளிச் சோதிவடிவமாக நின்றார். சோதிவடிவாய் நின்ற சிவபெருமானை வணங்கிய திருஞானசம்பந்தர்; “காதலாகிக்

கசிந்து" என்னும் திருப்பதிகத்தைப் பாடி; "இத்திருமணச்சடங்கில் கலந்து கொள்ள வந்தவர்கள் ஒவ்வொருவராகச் சோதியுட் புகுங்கள்" என்றார்.

திருமணச்சடங்கில் கலந்து கொள்ள வந்தோர் பெருமகிழ்வுடன் இறைவனை வணங்கி ஒவ்வொருவராகச் சோதியுட் புகுந்தனர். இறுதியாகத் திருஞானசம்பந்தரும் மனைவியும் உட்செல்ல சோதி மறைந்தது.

திருஞானசம்பந்தரின் அற்புதங்களைத் திருக்களிற்றுப்படியார் இவ்வாறு கூறுகிறது.

"ஓடம் சிவாகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனை தாளம் பாலை நெய்தல்- ஏடெதிர்வெப்(பு)
என்புக்குயிர் கொடுத்தல் ஈங்கு வைத்தாம் ஓங்கு புகழ்த்த
தென்புகலி வேந்தன் செயல்."

## திருஞானசம்பந்தரின் வேறு பெயர்கள்

பாலறாவாயர், ஆளுடைய பிள்ளையார், கவுனியர்கோன், தென்புகலிவேந்தன், பரசமயக்கோளரி, காழிவேந்தர் என்பனவாகும்.

இவரது காலம் கி.பி.640-656 வரையென்று டாக்டர் மா. இராசமாணிக்கனார் பெரியபுரான ஆராய்ச்சி என்னும் நூலில் கூறுகின்றார்.

## திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள்

1. மூன்று வயதில் உமையம்மையின் ஞானப்பால் உண்டு தேவாரம் பாடியது.
2. சிவபெருமானிடம் பொற்தாளமும் முத்துசிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னங்கள் பெற்றமை.
3. படிக்காசு பெற்றமை.
4. திருமறைக்காட்டுச் சிவன்கோவில் கதவு அடைக்கத் தேவாரம் பாடியமை.
5. பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியமை.

6. பாண்டிய மன்னரின் வெப்புநோய் மாற்றி அவனைச் சைவ சமயத்தவனாக்கியமை. அவனது கூனை நீக்கியது.
7. தீயிலிட்ட தேவார ஏடு எரியாமைக் காத்தது.
8. வைகை ஆற்றில் இட்ட தேவார ஏடு எதிராகச் செல்ல வைத்தது.
9. ஆற்றிலே தள்ளாடிய ஓடத்தைத் தேவாரம் பாடிக் கரை சேர்த்தது.
10. ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கியது.
11. பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தது.
12. எலும்புகளாக இருந்த பூம்பாவையை உயிர்ப்பித்தது.
13. திருமணத்தில் கலந்து கொண்டவர்களுக்குச் சிவசாயுச்சிய முத்தியளித்தது.

இவரது தேவாரத் திருப்பதிகங்கள் முதலாம் இரண்டாம், மூன்றாம் திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டது.

# திருநாவுக்கரசு நாயனார் வரலாறு

திருமுனைப்பாடி என்னும் நாட்டில் உள்ள திருவாமூரிலே புகழனார் என்றொரு சிவபக்தர் இருந்தார். அவரின் மனைவியார் பெயர் மாதினியார். அவர்களுக்குத் திலகவதி என்றொரு புத்திரியும் மருணீக்கியார் என்றொரு புத்திரனும் இருந்தனர். தனது மகனையும், மகளையும் சிவபக்தி மிக்கவர்களாகப் புகழனார் வளர்த்து வந்தார். அதனால் திலகவதியார் சிறுவயதிலேயே சிவன்மீது அளவற்ற பக்தியும், மருணீக்கியார் மீது அளவற்ற அன்பையும் வைத்திருந்தார். மிகுந்த மகிழ்வுடன் சிவனை அவர்கள் தொழுது வந்தனர்.

திலகவதியாருக்கு பன்னிரண்டு வயது நடைபெறும்போது அந்நாட்டின் சேனாதிபதியாகக் கடமை புரிந்த கலிப்பகையார் என்பவர் திலகவதியாரின் மீது ஆசை கொண்டு, பெரியவர்களை அழைத்துப் புகழனாரிடம் தனது விருப்பத்தைத் தெரிவிக்கும்படி அனுப்பினார். புகழனார் கலிப்பகையாரைத் தனது மகளுக்குத் திருமணம் செய்யச் சம்மதித்தார். அந்நாளில் அரசன் வடதேசத்திற்குப் படை எடுத்துச் சென்று நெடுநாள் யுத்தம் செய்தான். யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் புகழனார் சிவபதம் அடைந்தார். கணவரின் இறப்பைப் பொறுக்கமுடியாத மாதினியாரும் உடன் இறந்து போனார். அதனால் திலகவதியாரும் மருணீக்கியாரும் அநாதைகளாகினர். அவர்கள் சிவனையே தஞ்சமென நினைத்து சிவநினைவுடன் வாழ்ந்து வந்தனர். பெற்றோர் இல்லாததால் அவர்கள் எல்லாவற்றிற்கும் மிகவும் துன்பப்பட்டனர். மருணீக்கியார் சிறுவயதாகையால் பெற்றோரின் கவனிப்பும் இல்லாமையால் தமக்கையின் சொல்லை மீறி நடந்தார்.

நெடுநாட்களாக நடைபெற்ற போரில் சேனாதிபதியான கலிப்பகையார் வீரமரணம் அடைந்தார். அவரது மரணச் செய்தியைக் கேட்ட திலகவதியார் துயரமிகுதியால் உடன்கட்டை ஏற முயன்றார். அதனைக் கண்ட மருணீக்கியார்; "அக்கா, சிறுவனாகிய என்னைவிட்டு நீங்களும் இறந்து போனால் நான் யாருடன் வாழ்வது. அதனால் உங்களுக்கு முன்பே நான் உயிர்துறப்பேன்" என்றார்.

அதைக்கேட்ட திலகவதியார் துயர மேலீட்டால் புலம்பி அழுதார். பின் தன் தம்பியாரின் எதிர்கால வாழ்வை நினைத்து மனம் மாறி வேறு எவரையும் விவாகம் செய்து கொள்ளாமல் வீட்டிலே தவவாழ்வு வாழ்ந்தார்.

சிவனுக்குத் தொண்டுகள் பலவும் புரிந்து வாழ்ந்த மருணீக்கியார் விதிவசத்தால் சமணசமயப் போதனைகளை உண்மையென நம்பி மதிமயங்கிச் சமணசமயத்தில் சேர்ந்தார். சமண சமய நூல்கள் யாவற்றையும் கற்றுத் தேர்ச்சிபெற்று மகாபாண்டித்தியம் உடையவரானார். சமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்று பெயரிட்டு தங்கள் மத குருவாகக் கொண்டு வழிபட்டனர். தருமசேனர் தமது வித்தியா சாமர்த்தியத்தினாலே பௌத்தர்களை வாதில் வென்று புகழோடு இருந்தார். தருமசேனர் வாதிடுவதில் வல்லவர். சமயத்தத்துவங்களை விளக்குவதில் கைதேர்ந்தவர். அதனால் சமணர்கள் தருமசேனரைப் பெரிதும் மதித்து அவருக்குத் தம்மாலான சேவைகளைச் செய்து வந்தனர். அதனால் மகிழ்வுற்ற தருமசேனர் சமணசமயமே மெய்ச்சமயமெனப் பிரசாரம் செய்தார். அவரது போதனையால் கவரப்பட்ட மக்கள் பெருந்தொகையாகச் சமணசமயத்தில் சேர்ந்தனர்.

திருவாமூரில் இருந்த திலகவதியார் பக்தியுடன் திருவதிகை வீரட்டானம் என்னும் சிவத்தலத்திற்குச் சென்று; “எம் பெருமானே பெற்றோரையும் கணவரையும் இழந்த நான் எனது சகோதரனுக்காகவே உயிர்வாழ்கிறேன். இப்பொழுது அவன் அறிவிழந்து துர்ச் சமயமாகிய சமணத்தில் சேர்ந்து சிவ நிந்தனை செய்கிறான். இதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவனைப் பழையபடியும் சைவ சமயத்தவன் ஆக்கி என்னுடன் இருக்க அருள் புரிய வேண்டும்” என்று அழுதழுது பலமுறை வேண்டிக் கொண்டார்.

சிவபெருமானுக்கு அது சரியாகப்பட்டது. சைவசமயத்தில் பிறந்து சைவசமயத்தையும் தன்னையும் நிந்திக்கும் ஒரு திறமைசாலியைத் திருத்திச் சைவசமயத்தவனாக்கி, அவனைச் சைவத்தை வளர்க்கும் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார்.

அன்றிரவு திலகவதியாரின் கனவில் தோன்றிய பரமசிவன்; “அம்மையே, கவலை கொள்ளாதே; சிவத்தொண்டனான திருநாவுக்கரசர் மீண்டும் எம்மை வந்தடைந்து உம்மை மகிழ்விக்கும் பொருட்டு அவனுக்குச் சூலை நோயைக் கொடுத்து ஆட்கொள்வோம்” என்று அருளி மறைந்தார்.

நாட்கள் சில கடந்தன. நல்ல சுகதேகியாக வாழ்ந்த மருணீக்கியார் திடீரென்று நோய்வாய்ப்பட்டார்.

பரமசிவன் திருவாய் மலர்ந்தருளியபடி மருணீக்கியாருக்குச் சூலைநோய் வந்தது. சமணர்கள் நெடுநாள் மந்திரித்து மருந்து கொடுத்த போதும் தருமசேனரின் நோய் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. இனி தருமசேனரைக் காப்பாற்ற முடியாது எனக் கண்ட சமணர்கள், அவரை மடத்தில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். உதவி இல்லாது வருந்திய தருமசேனர் தனது தமக்கையாரிடம் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி; "அக்கா, அறியாமையால் நாம் உம்மை விட்டுச்சென்று சொல்லொணாத் துன்பங்களுக்குட்பட்டேன். தேவரீர் என்னை மன்னித்து ஏற்றருளும்" "மெய்ச்சமயமாகிய சைவசமயத்தை விட்டு வெளியேறிப் பொய்ச்சமயமான சமணத்தைப் பின்பற்றியதோடு சிவனையும் நிந்தனை செய்தேன். அதனால் தான் எனக்கு இந்தக் கொடியநோய் வந்தது. நான் சுகதேகியாக இருக்கும்போது என்னை நன்றாகக் கவனித்த சமணர்கள் நான் நோயாளியானதும் என்னைக் கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டனர்" என்றார்.

திலகவதியார் பரமசிவன் தனது கனவில் வந்து சொன்னவற்றைச் சொல்லித் திருநீறு கொடுத்துத் தம்பியாரை வீரட்டானேசுவரத்திற்கு அழைத்துச் சென்றார். மருணீக்கியார் வீரட்டானேசுவரத்தில் அமர்ந்துள்ள பரமசிவனை வணங்கி; "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்னும் திருப்பதிகத்தைப் பாட அவரைப் பற்றிப் பிடித்து வேதனை செய்த சூலைநோய் அவரின் உடலைவிட்டு நீங்கியது; "எம்பெருமானே என்னை வாட்டிய கொடிய சூலைநோயை நீக்கியமைக்காக வாழ்நாள் பூராகவும் உனக்குத் தொண்டுகள் செய்வேன்" என மனமுருகிக் கண்ணீர் சொரிந்து சொன்னார்.

அதைக்கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்த திலகவதியார் மருணீக்கியாரை அன்புடன் கட்டித் தழுவினார். அவருக்கு இருந்த அந்தப் பெருங்கவலை ஒரு நொடியில் நீங்கி ஆனந்தக் களிப்பைக் கொடுத்தது.

"நீ அற்புதமான திருப்பதிகத்தைப் எம்மீது பாடியதால் இன்று முதல் உன்னை 'நாவுக்கரசன்' என்று மக்கள் அழைப்பர். மேன்மேலும் இனிமையான பதிகங்களை என்மீது பாடு; என்றொரு அசரீரி வானில் எழுந்தது.

இதை அறிந்த சமணர்கள் பல்லவராஜனிடம் சென்று; "அரசே தருமசேனன் சைவசமயத்தில் சேர்ந்ததோடல்லாமல் உண்மைச் சமயமான சமணசமயத்தை நிந்தனை செய்கிறான். அதனால் அவனுக்குத் தகுந்த தண்டனை கொடுத்தல் வேண்டும்" என்றனர். அரசன் திருநாவுக்கரசரைக் கைது செய்து வரும்படி படைவீரர்களுக்குக்

கட்டளையிட்டான். அதனால் பெருமகிழ்வு கொண்ட சமணர்கள் அரசனின் படைவீரர்களோடு தாமும் கூடச் சென்றனர். தமது மதத்தைவிட்டு மாறித் தம்மைப் பரிகசித்த தருமசேனரைக் கொல்ல வேண்டும் என்று சமணர்கள் நினைத்தனர்.

போர் வீரர்கள் திருநாவுக்கரசரின் வீட்டை அடைந்து அவரைக் கைது செய்ய முற்பட்டனர். திருநாவுக்கரசர் பயப்படாது; "நாமார்க்கும் குடியல்லோம்" எனும் திருத்தாண்டகத்தைப் பாடிவிட்டு "வாருங்கள்" என அவர்களுடன் புறப்பட்டார்.

பல்லவராஜன் திருநாவுக்கரசரைக் கண்டு கோபம் கொண்டு அவரைக் கொல்லும் நோக்குடன் அவரைச் சுண்ணாம்பு அறையுள் அடைக்குமாறு கட்டளையிட ஏவலாளர்கள் திருநாவுக்கரசரை நீற்றறையில் அடைத்தனர். திருநாவுக்கரசர் இறைவனை வணங்கி; "மாசில் வீணையும் மாலை மதியமும்" எனும் திருக்கநற் தொகையைப் பாடிச் சிவனைத் தொழுதார். வெப்பம் பொருந்திய நீற்றறை குளிரறையானது. ஏழு நாட்கள் சென்றபின் நீற்றறையைத் திறந்து பார்த்த சமணர்கள் அங்கு திருநாவுக்கரசர் மகிழ்வுடன் இருப்பதைக்கண்டு திகைத்து அரசனிடம் சென்று; "அரசே நம்மிடம் கற்ற வித்தையைப் பயன்படுத்தித் தருமசேனர் நீற்றறைக்குள் வேகாமற் பிழைத்துக் கொண்டான். அவனுக்கு நஞ்சூட்டுவதே தகும்" என்றனர். சமணசமயத்தின்மீது அதீத பற்றுக்கொண்டிருந்த பல்லவராஜன் சமண முனிகளின் பேச்சை வேதமாக ஏற்பவன். தம்மிடம் கற்ற வித்தையால் தருமசேனர் தப்பியிருப்பார் என்று முழுமையாக நம்பிய அவன் தருமசேனரை உயிருடன் விடக்கூடாது எனத் தீர்மானித்தான்

மன்னனின் உத்தரவுப்படி திருநாவுக்கரசருக்கு நஞ்சு கலந்த பாற்சோறு கொடுக்கப்பட்டது. அதை மகிழ்வுடன் பெற்றுக் கொண்ட திருநாவுக்கரசர்; "அடியார்களுக்காக நஞ்சுண்ட எம்பெருமான் என்துயர் தீர்ப்பார்" என்றுகூறி மகிழ்வுடன் நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டார். அதைப்பார்த்த சமணர்கள் நஞ்சிலிருந்து அவர் தப்ப முடியாது என்று எண்ணி மகிழ்ந்தனர்.

பல நாட்கள் சென்றும் திருநாவுக்கரசர் இறவாதிருப்பதைக் கண்ட சமணர்கள் பயந்து நடுங்கியபடி அரசனிடம் சென்று முறையிட்டனர்; "அரசே, எமது சமய நூல்கள் முழுவதையும் கற்றுத் தேர்ந்து மகாவித்துவானாக இருந்த தர்மசேனர் எமது சமய மந்திரங்களைச் சொல்லி நஞ்சில் இருந்து தப்பிவிட்டான். இனி அவனைக் கொல்வதாயின் பட்டத்து யானையை அவிழ்த்து விடல் வேண்டும்" என்றனர்.

துட்டர்களின் போதனையை நம்பிய அரசன் திருநாவுக்கரசருக்கெதிரே பட்டத்து யானையை அவிழ்த்து விடும்படி கட்டளையிட்டான். திருநாவுக்கரசர் சிவபெருமானை எண்ணிப் பக்தி சிரத்தையுடன், "சுண்ணவெண் சந்தணச்சாந்தும்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். யானை திருநாவுக்கரசரை வலம்வந்து வீழ்நச்து வணங்கியது. பாகர்கள் அங்குசத்தால் குத்தித் திருநாவுக்கரசரைக் கொல்லும்படி ஏவினர். பட்டத்து யானை கோபங்கொண்டு பாகர்களைத் தூக்கி நிலத்தில் மோதிக் கொன்றுவிட்டு அங்கு நின்ற சமணர்களைத் தேடிப்பிடித்து ஒவ்வொருவராகக் கொன்றது. அதை எதிர்பாராத சமணர்கள் திகைத்தனர். தருமசேனரை எந்த வழியிலாவது கொல்ல வேண்டும் எனத் தீர்மானித்தனர்.

தப்பியோடிய சமணர்கள் அரசரிடம் சென்று நடுங்கியபடி; "அரசே, தருமசேனர் நம்மிடம் கற்ற வித்ததைமூலம் தன்னைக் கொல்லவந்த யானையை எம்மீது ஏவிவிட்டுப் பலரைக் கொன்றுவிட்டார். எனவே அவரைக் கல்லிலே கட்டிக் கடலிலே வீசவேண்டும்" என்றனர்.

சமணர்களின் போதனைகளால் முழுமையாக மனம்மாறிச் சமணமே மெய்ச்சமயமென்று திடமாக நம்பிய அரசன் தருமசேனரைக் கொல்லாதுவிட்டால் தம்மிடம் கற்ற வித்தைகளைக் கொண்டே தம்மைக் கொன்று விடுவார் என்று நம்பினான்.

அரசனின் கட்டளைப்படி போர்வீரர்கள் திருநாவுக்கரசரைக் கல்லிலே கட்டித் தோணியில் கொண்டு சென்று சமுத்திரத்திலே தள்ளிவிட்டனர். திருநாவுக்கரசர் சிவபெருமானை மனத்திலே நினைத்துச் "சொற்றுணை வேதியன்" என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார். கல்லு தெப்பமாக மிதந்து கரையை அடைந்தது.

அதனால் பயந்த சமணர்கள் நடுங்கினர். தாம் செய்யக்கூடியவற்றை எல்லாம் செய்தும் அதைத் தருமசேனர் இலகுவாக நீக்கியதை எண்ணச் சமணருக்கு அளவிட முடியாத கோபம் வந்தது. அரசனிடம் ஓடிச்சென்று நடந்தவற்றைக் கூறினர். முன்பே சைவசமயத்தில் இருந்த மன்னன் அதை அறிந்து மிக்க பயங்கொண்டான். திருநாவுக்கரசருக்குத் தீங்கு செய்தால் தனது உயிருக்கு ஆபத்து வரும் என அஞ்சினான். அதனால் பல்லவராஜன் திருநாவுக்கரசரை வணங்கி, தான் செய்த பிழைகளைப் பொறுத்தருளுமாறு கேட்டுத் தானும் சைவசமயத்தில் சேர்ந்தான். பின் அவ்வூரில் குணதரவீச்சரம் என்னும் கோயிலைக் கட்டினான். மன்னன் எவ்வழியோ

அவ்வழியே மக்களும் செல்வர். அதனால் நாட்டுமக்கள் அனைவரும் சமண சமயத்தைக் கைவிட்டு விட்டுச் சைவசமயத்தைத் தழுவினர். பாழடைந்திருந்த சிவன்கோவில்களை மன்னனின் உத்தரவுப்படி மக்கள் புணரமைத்தனர். பல காலமாகப் பூசை செய்யப்படாமலிருந்த கோவில்களில் பூசைகளும், ஆராதனைகளும் இடம்பெற்றன. மக்கள் சமணர்களைக் கண்டவுடன் அவர்களைப் பிடித்து அரசனிடம் ஒப்படைத்தனர். அரசன் அவர்களைச் சிறையில் அடைத்தான்.

ஒருநாள் திருநாவுக்கரசர் திருத்தூங்கானை மாடம் என்னும் கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி; “சுவாமி அடியேன் இழிவினை உடைய சமணசமயத்தில் சேர்ந்தமையால் மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் உண்மைச் சைவனாதல் வேண்டும். அதற்குத் தேவரீது தமது சூலத்தையும், இடபத்தையும் எனது தோளில் பதித்தருளல் வேண்டும்” எனக் கேட்டார்.

திருநாவுக்கரசரின் வேண்டுகோளை நிறைவேற்ற எண்ணிய பரமசிவன் தனது சிவகணங்களில் ஒன்றை அனுப்பி அவரின் தோளிலே சூலத்தையும், இடபத்தையும் பொறிப்பித்தார்.

அதனால் பெருமகிழ்வுற்ற திருநாவுக்கரசர் தான் சமணசமயத்திற்குச் சென்றமையால் உண்டான தீட்டு அகன்று சிவபெருமானின் பெருங்கருணை தன்னை வந்து அடைந்து விட்டதாகப் பெருமிதம் கொண்டார்.

சிவத்தலங்கள் தோறும் சென்று திருப்பதிகம் பாடுவதை வழக்கமாகக் கொண்ட திருநாவுக்கரசர், அவ்வாலயங்களில் உழவாரத் திருத்தொண்டும் செய்து வந்தார். ஒருநாள் அவர் சிதம்பரத்திற்குச் சென்று பதிகம் பாடிவிட்டு உழவாரத் தொண்டு செய்தார். அப்பொழுது அங்கு வந்த அடியார்கள் உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தப் பெருமானின் மகிமையைச் சொன்னார்கள். அதைக் கேட்டு மகிழ்ந்த திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைத் தரிசிப்பதற்காகச் சீர்காழியை நோக்கிப் புறப்பட்டார்.

திருஞானசம்பந்தரைப் பார்க்கத் திருநாவுக்கரசர் செல்வதை அறிந்த சிவனடியார்கள் பலர் அவருடன் புறப்பட்டனர். செல்லும்போது அவர்கள் திருமுறைகளைப் பாடிச் சென்றதாலும், அவர்கள் திருஞானசம்பந்தரைக் காணச் செல்வதாகவும் அறிந்த சிவனடியார்கள் பலர் திருநாவுக்கரசரோடு சேர்ந்து சம்பந்தப் பெருமானைத் தரிசிக்கச் சென்றனர்.

திருநாவுக்கரசர் தன்னைச் சந்திக்க வருவதைக் கேள்விப்பட்ட திருஞானசம்பந்தர், அடியார்களுடன் புறப்பட்டுச் சென்றார். திருஞானசம்பந்தரைக் கண்ட திருநாவுக்கரசர் அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி; "அப்பரே" என்றழைத்தார். அதன்பின் இருவரும் பல சிவத்தலங்களுக்குச் சேர்ந்து சென்று பரமசிவனை வணங்கிப் பதிகங்களைப் பாடினர்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தத்தமது ஊர்களிலுள்ள சிவன் கோவில்களைத் தரிசிக்க வருகிறார்கள் என்பதை அறிந்த ஊரவர்கள் தமது ஊர்களைச் சுத்தம் செய்து அலங்கரித்தனர். பூரண கும்பம் வைத்து அவர்களை வரவேற்று வணங்கினர்.

ஒருநாள் திருநாவுக்கரசர் திங்களூருக்குச் சென்றார். அங்கே வாழ்ந்த அப்பூதியடிகள் என்னும் சிவத்தொண்டர் திருநாவுக்கரசரின் மீது கொண்ட அளவற்ற பக்தியால் தம்முடைய இருபுத்திரர்களுக்கும் மூத்ததிருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்று நாமம் சூட்டினார். அத்துடன் தன்னுடைய அன்னசத்திரம், கிணறு, குளம், தண்ணீர்ப்பந்தல் போன்றவற்றிற்கும் திருநாவுக்கரசரின் பெயரையே சூட்டியிருந்தார். அதைக்கண்டு வியப்படைந்த திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளைச் சந்திப்பதற்காக அவரின் வீட்டிற்குச் சென்றார்.

திருநாவுக்கரசரை அப்பூதியடிகளாரும் அவரது மனைவி பிள்ளைகளும் வணங்கினார்கள். அப்பூதியடிகளார் திருநாவுக்கரசரைத் தமது வீட்டில் பகற்போசனம் அருந்துமாறு அன்புடன் கேட்டார். திருநாவுக்கரசர் மகிழ்வுடன் சம்மதித்தார்.

சமையல் முடிந்ததும் மூத்ததிருநாவுக்கரசு வாழையிலை வெட்டுவதற்காக வாழைத் தோட்டத்திற்குச் சென்றபோது அங்கிருந்த நாகம் ஒன்று தீணடடியதால் அவன் மரணமானான்.

மகன் நாகம் தீண்டி இறந்ததையிட்டுக் கவலை கொண்ட அப்பூதியடிகள் தான் இவ்வளவு காலமும் கேள்விப்பட்டு வணங்கிய திருநாவுக்கரசருக்கு உணவு கொடுக்க முடியாமல் போய்விட்டதே என்று மிகவும் வருந்தினார். அதன்பின் திருநாவுக்கரசருக்கு கட்டாயம் உணவு கொடுக்க வேண்டும் என்று நினைத்துச் சிவனை மனமுருகித் தொழுதார்.

இறந்த மூத்ததிருநாவுக்கரசுவின் உடலை மறைத்துவைத்துவிட்டுத் திருநாவுக்கரசருக்கு அப்பூதியடிகளின் மனைவியார் அன்னம் படைத்தார். நடந்த சம்பவத்தை சிவனருளால் அறிந்து கொண்ட திருநாவுக்கரசர்; "உமது புத்திரர்களையும் அழைத்து வாரும் ஒன்றாக அமர்ந்திருந்து உணவு உண்போம்" என்றார். அதைக் கேட்டுச் செய்வதறியாது திகைத்து நின்ற அப்பூதியடிகள் வேறு வழியின்றி நடந்த சம்பவத்தைச் சொன்னார்.

உடனே திருநாவுக்கரசர் இறந்து கிடந்த அப்பூதியடிகளின் மகனின் சடலத்திற்கு அருகே சென்று சிவனை நினைத்து; 'ஒன்று கொலாமவர் சிந்தை' எனும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே இறந்துகிடந்த மூத்ததிருநாவுக்கரசு உயிர்த்தெழுந்து திருநாவுக்கரசரை வணங்கினான்.

திருநாவுக்கரசரின் மகிமையை உணர்ந்த அப்பூதியடிகள் திருநாவுக்கரசரின் மேல் அளவில்லாத அன்பு கொண்டார். ஊர்மக்கள் அவ் அதிசயத்தை அறிந்து அப்பூதியடிகளின் வீட்டிற்கு வந்து திருநாவுக்கரசரை வணங்கி ஆசிபெற்றுச் சென்றனர்.

அதன்பின் திருநாவுக்கரசர் பல சிவத்தலங்களிற்கும் சென்று உழவாரத்திருப்பணி புரிந்தும், திருப்பதிகங்கள் பாடியும் வந்தார். அந்நாளில் நமிநந்தியடிகள் நீரினால் விளக்கேற்றி வந்தமையை அறிந்து, அவரைச் சந்தித்து அவரது பாதாரவிந்தங்களைத் தொழுதார். அவரின் மகிமையை உலகினர் அறிந்து கொள்வதற்காக அவரைப் போற்றித் திருப்பதிகம் ஒன்றைப் பாடினார். பின் திருஞானசம்பந்தருடன் சேர்ந்து பல திருத்தலங்களைத் தரிசித்துத் திருப்பதிகங்கள் பாடி, உழவாரத் திருத்தொண்டு செய்தார். பின் திருநாவுக்கரசுநாயனாரும் திருஞானசம்பந்த மூர்த்திநாயனாரும் திருவீழிமிழலையை அடைந்தனர். அங்கு பருவமழை பெய்யாததால் மக்கள் உணவின்றிக் கஷ்டப்பட்டனர். அதனால் நாயன்மார்கள் இருவரும் இறைவனிடம் படிக்காசு பெற்று மக்களின் துயர் தீர்த்தனர். பின் இருவரும் இறைவனை வேண்ட வருணபகவான் மனம் இரங்கி பெருமழை பொழிந்தார். அதனால் மக்கள் மகிழ்ந்தனர்.

நாயன்மார் இருவரும் திருவீழிமிழலையில் இருந்து புறப்பட்டுச் சென்று வேதாரணியத்தை அடைந்தனர். வேதாரணியத்தின் கதவு பல வருடங்களாகப் பூட்டப்பட்டிருந்தது. அதனால் அடியவர்கள் மனம் வருந்தி இன்னொரு வழியாகச் சென்று சுவாமி தரிசனம் செய்து வந்தனர். இதையறிந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருநாவுக்கரசரை அன்புடன் நோக்கி; “அப்பரே இக் கதவு திறக்கப் பதிகம் பாடுவீர்” என்று சொன்னார். அதைக்கேட்டு மகிழ்ந்த அப்பர் சுவாமிகள் “பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ” என்ற பதிகத்தைப் பாடினார். ஆனால் கதவு திறக்கப்படவில்லை. அதனால் மனம் வருந்திய நாவுக்கரசர்; “இரக்கமொன்றிலீரெம் பெருமானிரே இக்கதவந் திறப்பிம்மினே” என்று இறைவனை இறைஞ்சினார். அப்பதிகம் பாடியதும் பல வருடங்களாக மூடப்பட்டிருந்த கதவு திறந்தது. மக்கள் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி, திருக்கதவு வழியாக உள்ளே சென்று சுவாமி தரிசனஞ் செய்தனர்.

பின் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைப் பார்த்து; “இத் திருக்கதவு திறக்க நாம் பதிகம் பாடினோம். நீர் மூடப்பாடும்” என்றார்.

அதைக்கேட்டு மகிழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பரமசிவனை வணங்கித் “சதுரம் மறையானை” என்னும் திருப்பதிகம் பாட அக்கதவு மூடிக்கொண்டது. அதன்பின் அக்கதவு காலையில் திறக்கப்பட்டு மாலையில் தானாகவே மூடிக்கொள்ளும். அப்பருக்குத் தான் முதலில் பதிகம் பாடியவுடன் அக்கதவு திறக்கப்படாதிருந்தது கவலையைக் கொடுத்தது. தான் ஏதாவது தவறு செய்து விட்டேனோ என அஞ்சிய அப்பர் மடத்தில் தங்கியிருந்தார். அப்போது சிவபெருமான் அப்பர் முன் தோன்றிக் காட்சி கொடுத்து “அப்பரே உனது பணியைத் தொடர்” என்றார். அப்பர் அளவில்லாத ஆனந்தம் அடைந்தார்”.

திருநாவுக்கரசர் வேதாரணியத்திலே சில நாட்ககள் தங்கிப் பின் வடதளி என்னும் ஆலயத்திற்குச் சென்றார். அவ்வாலயத்தில் வீற்றிருக்கின்ற சிவலிங்கப் பெருமானைச் சமணர்கள் மறைந்து வைத்திருந்தனர். அச் சிவலிங்கப் பெருமானை அப்பர் சுவாமிகள் வணங்கச் சென்றபோது சிவலிங்கப் பெருமான் அந்நாட்டு அரசரின் கனவில் தோன்றி; “நாம் சமணர்களால் மறைக்கப்பட்டிருக்கிறோம். அப்பர் சுவாமிகள் எம்மை வழிபட வழிசெய்” என்று அருளினார். உடனே அரசன் தன் போர்வீரர்களுடன் அவ் ஆலயத்திற்குச் சென்று சமணர்களை அழித்துச் சிவலிங்கப் பெருமானை அப்பர் சுவாமிகள் வழிபட வைத்தார். அதன் பின் அப்பர் சுவாமிகள் திருப்பஞ்சீலியை நோக்கிச் சென்றார். செல்லும் வழியிலே அவர் தாகத்தினாலும், பசியாலும் வருந்த பரமசிவன் அவருக்கு நீரும் பொதிசொறும் கொடுத்தார். பின் அவருடன் திருப்பஞ்சீலிவரை சென்றார். பின் உத்தர கைலாயத்திற்குச் செல்ல விரும்பிக் கால்நடையாகச் சென்றார். நெடுந்தூரம் நடந்தமையால் கால்கள் புண்ணாகின. அதனால் அவர் உருண்டுருண்டு

சென்றார். அதனால் உடல் புண்ணானது. அப்பரது உடல் நிலையைக் கண்டு கவலை கொண்ட சிவபிரான், பிராமணவேடம் தாங்கி வந்து; அப்பரே, தேவர்களாலும் கூட அடையமுடியாத உத்தரகைலாயத்திற்கு உம்மால் செல்லமுடியாது திரும்பிப் போம்" என்று கூறினார்.

"நான் இவ்விடத்தில் இறந்தாலும் இறப்பனே தவிரத் திரும்பிச் செல்ல மாட்டேன்" என்றார் திருநாவுக்கரசர்.

சிவபிரான் மனம் மகிழ்ந்து; "இக்குளத்தில் நீராடி உத்தரகைலாயங்கிரியை வந்தடை" என்று கூறி மறைந்தார்.

திருநாவுக்கரசரின் மகிழ்வுக்கு அளவே இல்லை. அவர் மகிழ்ச்சிப் பெருக்கால் தன்னை மறந்து, சிவனின் நினைவாக ஆடினார்; பாடினார். வந்தவர் சிவன் என்று தெரிந்தமையால் தான் இவ்வுலக வாழ்வில் பெறவேண்டியவற்றைப் பெற்றுவிட்டதாக நினைத்தார்.

திருநாவுக்கரசர் குளத்தில் இறங்கி நீராடினார். சிவபெருமான் அவரின் அருகே வந்து கைலாயங்கிரிக்கு அவரை அழைத்துச் சென்று காட்சி கொடுத்தார்.

பாண்டிய நாட்டிற்குச் சென்று கூன்பாண்டியனின் கூனை நிமிர்த்திய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், அப்பர் சுவாமிகள் திருப்பூந்துருத்தியில் இருப்பதைக் கேள்விப்பட்டு அவரைச் சந்திப்பதற்காக வந்தார். அடியார் குழாத்துடன் முத்துச்சிவிகையில் வந்த ஞானசம்பந்தரைக் கண்ட அப்பர் சுவாமிகள் யாரும் காணாதபடி சம்பந்தரின் அருகே சென்று அவர் ஏறிவந்த முத்துச்சிவிகையைத் தாங்கி வந்தார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பூந்துருத்திக்கு வந்து; "அப்பர் சுவாமிகள் எங்கே" என்று ஆவல் பொங்கக் கேட்டார்.

"அடியேன் தங்களின் முத்துச்சிவிகையைச் சுமந்து வருகிறேன்" என்றார் அப்பர்.

பதைபதைத்துச் சிவிகையால் இறங்கிய ஞானசம்பந்தர் அப்பரின் காலிலே விழுந்து பணிந்தார். சில காலம் இருவரும் அங்கிருந்து தரிசனம் செய்தனர்.

பரமசிவன் அப்பரின் பெருமைகளை உலகறியச் செய்வதற்காக திருப்புகலூரிலேயுள்ள சிவாலயத்தில் திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டு செய்யும்போது அங்குள்ள கற்களையெல்லாம் பொற்கற்களாக மாற்றினார். எனினும் அப்பர் அவற்றைக் கற்களாக எண்ணிக் கடகத்தில் அள்ளிச் சென்று வெளியே கொட்டினார். அதன்பின் தேவ கன்னியர்கள் அவர் முன் இனிய கானம் பாடி அழகாக நடனமாடினர். அப்பர் சுவாமிகள் அவற்றைப் பாராது சிவனையே நினைத்துக்கொண்டு தான் செய்த திருப்பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். அதனால் மனம் மகிழ்ந்த தேவகன்னியர் அப்பரை வணங்கிவிட்டுத் தமதுலகம் சென்றனர்.

சிவத்தலங்கள் தோறும் சென்று பதிகம்பாடி உழவாரத் தொண்டு புரிந்த திருநாவுக்கரசு நாயனார், சித்திரை மாதத்திலே சதய நட்சத்திரத்திலே "உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்ற திருப்பதிகம் பாடி சிவனின் பாதங்களை அடைந்தார். அப்போது அப்பருக்கு எண்பத்தொரு வயது. இவரது குருபூசை தினம் சித்திரை மாதத்தில் வரும் சதய நட்சத்திரமாகும்.

நாவுக்கரசரின் அற்புதச் செயல்கள் சித்தாந்த சாத்திர நூல்களிலொன்றாகிய திருக்களிற்றுப்படியார் என்ற நூலில் உள்ளது.

"கொல்கரியின் நீற்றறையில் நஞ்சிற் கொலை தவிர்த்தல்
கல்லே மிதப் பாய்க்கடல் நீத்தல் நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசல் திறப்பித்தல்
திருவாரூராளி செயல்."

திருநாவுக்கரசரை மருணீக்கியார், நாவுக்கரசர், சொற்கோ, வாக்கின் வேந்தன், அப்பர், வாகீசர், ஆளுடைய அரசு, உளவாரப் படையாளி, தாண்டக வேந்தன் என்று மக்கள் பெருமையுடன் அழைப்பர். இவருடைய காலம் கி. பி. 580 – 661 வரையென்று திரு. மா. இராசமாணிக்கனார் பெரியபுராண ஆராய்ச்சி என்ற நூலில் கூறுகிறார்.

"ஆழிமிசை சன்மிதப்பரில் அணைந்த பிரான் அடிபோற்றி"

**நாவுக்கரசர் செய்த அற்புதங்கள் :**

1. சமணரால் ஏழு தினங்கள் சுண்ணாம்பு அறையில் பூட்டப்பட்டும் இறவாமல் தப்பியது.
2. சமணர் கொடுத்த நஞ்சை ஏற்று உண்டு உயிர் பிழைத்தது.
3. சமணரால் கொல்வதற்காக அனுப்பப்பட்ட பட்டத்து யானை அவரை வணங்கியது.
4. கல்லில் கட்டிக் கடலில் இட்டபோது மிதந்தது.
5. சிவபெருமானிடம் படிக்காசு பெற்றது.
6. வேதங்களால் பூட்டப்பட்ட திருக்கதவைத் திறந்தது.
7. பாம்புதீண்டி இறந்த மூத்ததிருநாவுக்கரசரை உயிர்ப்பித்தது.
8. கைலை செல்லும்போது சிவபெருமானால் தடுக்கப்பட்டுப் பின் சிவபெருமானின் அருளால் கைலையை அடைந்தது.

இவரது தேவாரங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டது.

# சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறு

திருக்கைலாயமலையில் வீற்றிருந்து தேவர்களுக்கு அருள்பாலிக்கின்ற சிவபெருமானின் அடியார்களுள் ஒருவர் ஆலாலசுந்தரர். அவர் ஒருநாள் சிவபெருமானுக்குப் பூசை செய்வதற்காகத் திருக்கைலாயமலையில் உள்ள நந்தவனத்திற்குச் சென்றார். அங்கே உமாதேவியாருக்கு மாலை சூட்டுவதற்காக அனந்திகையும் கமலினியும் பூப்பறித்துக்கொண்டு இருந்தனர். அவர்களின் அழகில் மயங்கிய ஆலாலசுந்தரர் அவர்களின் மீது காதல் கொண்டார். அதேபோல ஆலாலசுந்தரரின் அழகில் மயங்கிய அனந்திகையும் கமலினியும் ஆலாலசுந்தரர் மீது காதல் கொண்டனர். இதை அறிந்த சிவபெருமான் ஆலாலசுந்தரரை அழைத்துச் சொன்னார்; "சுந்தரா, நீ நந்தவனத்தில் பூப்பறித்துக்கொண்டு இருந்த தேவகன்னிகளான அனந்திகை மீதும் கமலினி மீதும் ஆசை கொண்டமையால் பூவுலகில் பிறந்து உனது ஆசைகளைத் தீர்த்தபின்பு இவ்வுலகம் வா".

அதைக்கேட்டுப் பயந்து நடுங்கிய ஆலாலசுந்தரர்; "தேவரீர், நான் அறியாமையால் தவறு செய்துவிட்டேன். என்னை மன்னித்தருளல் வேண்டும். அத்துடன் அறியாமையால் நான் பூவுலகில் தவறு செய்யும் போதெல்லாம் என்னைத் தடுத்தாட்கொள்ளல் வேண்டும்" என்றார்.

"அப்படியே ஆகட்டும்" என்றார் சிவபெருமான். ஆலாலசுந்தரர் பாரத கண்டத்திலே உள்ள திருமுனைப்பாடி என்னும் நாட்டிலே சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் புத்திரனாக அவதாரம் செய்தார். பெற்றோர் அவருக்கு நம்பியாரூரர் என்று பெயர் வைத்தனர். இவர் குழந்தைப் பருவத்தில் ஒரு நாள் சிறு தேர் ஒன்றைச் செய்து வீதியில் அதை இழுத்து விளையாடினார். அப்பொழுது அவ்வழியால் குதிரையில் சென்ற அந்நாட்டு அரசனான நரசிங்கமுனையனார் என்பவன் அக்குழந்தையின் அழகைக்கண்டு ரசித்து அதைத் தான் வளர்க்க விரும்பினான். அதைப் பெற்றோரும் விரும்பினர். அதனால் நம்பியாரூரர் அரண்மனையில் வாழ்ந்து வந்தார். அரண்மனையில் வாழ்ந்தாலும் அவர் அந்தணர்களுக்குரிய ஒழுக்கத்தைப் பேணி வந்தார். நம்பியாரூரர் ஆதிசைவக் குலத்துக்குரிய ஒழுக்க விதிகளைப் பேணியதோடு வேத ஆகமக் கல்வியை நன்கு கற்றுத் தேறினார்.

வாலிபப் பருவத்தை அடைந்த நம்பியாரூரருக்கு அவ்வூரில் வாழ்ந்த சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்து வைக்கச் சடையனார்

விரும்பினார். அதற்குச் சடங்கவி சிவாச்சாரியார் சம்மதம் தெரிவித்தார். ஒரு சுபதினத்தில் நம்பியாரூரர் திருமணக் கோலம் பூண்டு சடங்கவி சிவாச்சாரியாரின் வீட்டில் அழகாக அமைக்கப்பட்ட திருமணப் பந்தலில் இருந்த மணவறையில் அமர்ந்திருந்தார்.

அப்பொழுது ஒரு கிழப்பிராமணர் அங்கு வந்து சபையோரைப் பார்த்துச் சொன்னார்; "எனக்கும் மணக்கோலத்தில் அமர்ந்திருக்கும் நம்பியாரூரனுக்கும் ஒரு வழக்கு உள்ளது. அதைத் தீர்த்து வைத்த பின்பே திருமணம் நடைபெறுதல் வேண்டும்".

சபையோர் திகைத்தனர். சுபநிகழ்வு நடைபெறும் இடத்திற்கு அழைக்காமல் வந்து கலகம் செய்யும் அம் முதியவர் மீது சபையோருக்குக் கடுங்கோபம் வந்தது. அதைவிட நம்பியாரூரருக்கு கடும் கோபம் வந்தது. வந்த முதியவரைக் கோபத்துடன் பார்த்தார்.

"எமக்கு உம்மைத் தெரியாது. அப்படி இருப்பினும் நீர் வழக்கு என்னவென்று சொன்னால் அது உண்மையானதாகவிருந்தால் அதைத் தீர்த்து வைத்த பின்பே எனது மகளை நான் மணவறைக்கு அழைத்து வருவேன்" என்றார் சடங்கவி சிவாச்சாரியார்.

திருமண மண்டபத்தில் அமர்ந்திருந்த அந்தணர்கள் அதற்குச் சம்மதம் தெரிவித்தனர்.

எனினும் மண்டபத்தில் உள்ளோர் விடயமறியாது பலவற்றைக் கதைத்தனர். அவர்களின் கதை நம்பியாரூரருக்குக் கோபத்தை வரவழைத்த போதும் சபையில் குழப்பம் விளைவிக்கக்கூடாது என்று பேசாது இருந்தார்.

"மணக்கோலத்தில் இருந்த நம்பியாரூரன் எனக்கு அடியவன்" என்றார் கிழப்பிராமணர்.

அதைக்கேட்ட நம்பியாரூரருக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. "ஏய் கிழப்பிராமணரே, பிராமணர்களுக்குப் பிராமணர்கள் அடிமையாக இருப்பதாக நான் கேள்விப்பட்டதே இல்லை" என்றார்.

"அக்காலத்திலே உன்னுடைய பாட்டனார் எழுத்தித் தந்த அடிமை ஓலை இது" என்று ஓர் ஓலையை எடுத்துக் காட்டினார் கிழப்பிராமணர்.

“பித்தரே, … பிராமணர்களை அடிமை கொள்ளும் வழக்கம் உலகெங்கினும் இல்லை” என்று கோபமாகக் கூறியபடி முதியவரின் கையில் இருந்த ஓலையைப் பறித்துக் கிழித்தார் நம்பியாரூரர்.

“கற்றோர் அவையில் நான் கொண்டு வந்த ஓலையை நம்பியாரூரன் பறித்துக் கிழித்தது நியாயம் அல்ல. அப்படிக் கிழித்ததன் மூலம் தான் எனக்கு அடிமை என்பதை நம்பியாரூரன் ஒத்துக் கொண்டான். என்னிடம் இதற்கான மூல ஓலை உள்ளது வாருங்கோ காட்டுகிறேன்” என்று கூறிவிட்டு நடந்தார் கிழப்பிராமணர்.

திருமணத்திற்கு வந்தவர்கள் நம்பியாரூரர் ஓலையைப் பறித்துக் கிழித்தமையைக் கண்டு வேதனைப் பட்டனர். இதில் உண்மையில்லாவிட்டால் ஏன் ஓலையைப் பறித்துக் கிழிக்க வேண்டும். அது நியாயமான செயல் என நியாயம் தெரிந்த பெரியவர்கள் நினைத்தனர்.

திருமணப்பந்தலில் இருந்த பெரியவர்களுடன் நம்பியாரூரன் கிழப்பிராமணரைப் பின்தொடர்ந்து சென்றார். கிழப்பிராமணர் திருவெண்ணெய் நல்லூரில் அமைந்துள்ள பிராமணரின் சபையிலே போய் நடந்தவற்றை முறையிட்டார். அதைக்கேட்ட அங்குள்ள பிராமணர் ஒருவர்; “பிராமணர்களை அடிமை கொள்ளும் வழக்கம் இவ்வுலகத்திலே இதுவரையிலும் இல்லை” என்றார்.

“அதைக் கேட்ட கிழப்பிராமணர் நம்பியாரூரன் என்னிடம் இருந்து பறித்துக் கிழித்த ஓலை, மூல ஓலையைப் பார்த்து எழுதிய பிரதி ஓலை, மூல ஓலை என்னிடம் உள்ளது. அதை ஆரூரன் பறித்துக் கிழிக்காதபடி நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்” என்று கூறித் தனது இடுப்பில் சொருகி வைத்திருந்த மூலஓலையை எடுத்துக் கொடுத்தார்.

அதை வாங்கிய பிராமணர் ஒருவர் சபையோர் கேட்கும்படியாக வாசித்தார்; “திருநாவலூரில் இருக்கின்ற ஆதிசைவனான ஆரூரன் என்கின்ற நான், திருவெண்ணெய் நல்லூரில் இருக்கின்ற பித்தனுக்கு, நானும் எனது சந்ததியாரும் தொண்டு செய்வதற்குச் சம்மதித்து இவ்வோலையை எழுதிக் கொடுக்கிறேன். இப்படிக்கு ஆரூரன்.

பிராமணர்கள் அவ்ஓலையை வாங்கிப் பார்த்துவிட்டு நம்பியாரூரன் கிழப்பிராமணருக்கு அடிமை என்பதை ஒப்புக் கொண்டனர்.

அதனால் திகைப்படைந்த நம்பியாரூரன் வேறு வழியின்றித் தான் கிழப் பிராமணரின் அடிமை என்பதை ஒப்புக்கொண்டார்.

“இவ் ஓலையில் எழுதப்பட்டதை நான் ஏற்றுக் கொள்கிறேன்” என்ற நம்பியாரூரன்; “வாருங்கள் செல்வோம்” என்று அக்கிழப்பிராமணரைப் பார்த்துச் சொன்னார்.

கிழப்பிராமணர் முன்னே நடக்க நம்பியாரூரரும் ஏனைய பிராமணர்களும் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். கிழப்பிராமணர் திருவருட்துறை என்னும் அவ்வூரில் உள்ள சிவாலயத்தினுள் சென்று மறைந்தார்.

தனது முற்பிறப்பை அறிந்த நம்பியாரூரன் திகைத்துப் போனான். அங்கிருந்த பிராமணர்கள் நம்பியாரூரரை அதிசயத்துடன் பார்த்தனர். இவர் சிவனருள் பெற்றவர் என்றெண்ணி வணங்கினர்.

நம்பியாரூரரும் கூட வந்த பிராமணர்களும் திகைத்து நிற்க, சிவபெருமான் இடபவாகனத்தின் மேல் பார்வதி சமேதரராய்த் தோன்றினார்; “சுந்தரா, நீ முன்பு நமக்குத் தொண்டனாக இருந்து எனக்குத் தொண்டுகள் செய்தாய். நீ கைலாயமலையில் இருந்தபோது நந்தவனத்தில் பூப்பறித்த எனது அடியவர்களான அனந்திகை, கமலினி என்ற இருபெண்களின் மேல் இச்சை கொண்டமையால் எனது கட்டளைப்படி பூமியில் அவதரித்தாய். அதனால் தான் உன்னைத் தடுத்தாட் கொண்டேன். நீ என்னுடன் வன்சொற்களைப் பேசியமையால் “வன்றொண்டன்” என்னும் பெயரைப் பெறுவாய் அத்துடன் “இனிய தமிழில் என்னைப் பாடு” என்றார்.

நம்பியாரூரர் தடுமாறினார்; “என்னால் பாட முடியவில்லை” என்று அழுதார்.

“நீ என்னைப் பித்தன் என்று ஏசியமையால் பித்தன் என்றே பாடு” என்றார் சிவபெருமான். உடனே சுந்தரமூர்த்தி நாயனார் “பித்தா பிறை சூடி” என்னும் தேவாரத்தைப் பாடினார்.

அதன்பின் சுந்தரமூர்த்தி நாயனார் சிதம்பரத்திற்குச் சென்று அங்கு திருநடனம் செய்கின்ற சிவனைத் தரிசிக்க விரும்பி நடந்து சென்றார். வழியிலே திருவதிகை என்னும் சிவத்தலத்திற்கு அருகில் அமைந்திருந்த மடத்தில் இரவு

தங்கினார். அன்றிரவு திருவதிகை வீரட்டானேஸ்வரர் ஒரு பிராமண வடிவம் கொண்டு வந்து நித்திரை செய்து கொண்டிருந்த சுந்தரமூர்த்தி நாயனாரின் தலையின் மேல் தனது பாதங்களை வைத்துப் படுத்தார். அதனால் நித்திரை கலைந்த சுந்தரமூர்த்தி நாயனார் இன்னோர் இடத்தில் சென்று படுத்தார். வீரட்டானேஸ்வரர் சுந்தரர்க்கருகில் சென்று தனது பாதங்களை மீண்டும் தலையின் மேல் வைத்துப் படுத்தார். அதனால் நித்திரை விட்டெழுந்த சுந்தரமூர்த்தி நாயனார் "நீர் யார்? என்னை ஏன் உமது காலால் மிதிக்கிறீர்?" என்று கேட்டார்.

"என்னை உனக்குத் தெரியவில்லையா…?" என்று வீரட்டானேஸ்வரர் கேட்டுவிட்டு மறைந்தார்.

தன்னைக் காலால் மிதித்தவர் சிவபெருமான் என அறிந்து மகிழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் "தம்மானையறியாத சாதியாருளரே" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

தன்னைச் சிவபெருமான் பின்தொடர்ந்து வருவதை எண்ணிச் சுந்தரமூர்த்தி நாயனார் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். தனது கோரிக்கைக்கு இணங்கத் தன்னைத் தடுத்தாட் கொள்ளவே சிவபெருமான் தன்னைப் பின்தொடர்ந்து வருவதாக எண்ணினார்.

அதன் பின்பு சிதம்பரத்திற்குச் சென்ற சுந்தரமூர்த்தி நாயனார் கனகசபையிலே நடனம் செய்கின்ற சபாநாயகரைத் தரிசித்துவிட்டுத் திருவாரூருக்குச் சென்றார். திருக்கைலாய மலையிலே இருந்த உமாதேவியாவியாரின் தோழியர்களில் ஒருத்தியான கமலினி என்பவள் திருவாரூரிலே உருத்திரகணிகையர் குலத்லே பரவையார் என்னும் பெயரில் பிறந்திருந்தாள். மங்கைப்பருவம் அடைந்திருந்த அவள் அன்று சுவாமி தரிசனம் செய்வதற்காகக் கோயிலுக்குத் தோழிகளுடன் வந்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர். இருவருக்கும் தாம் முன்பு எங்கோ சந்தித்துப் பேசியது ஞாபகத்தில் வந்தது. எனினும் அது அவர்களது நினைவுக்கு வரவில்லை.

சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்த பரவையாரைக் கண்டு காதல் கொண்ட சுந்தரமூர்த்தி நாயனார் அவரைத் தனக்குத் திருமணம் செய்து தரும்படி சிவபெருமானை வேண்டினார். அதேபோல் சுந்தரமூர்த்தி நாயனாரைக் கண்டு காதல் கொண்ட பரவையாரும் தனக்கு அவரைத் திருமணம் செய்து தரும்படி சிவபெருமானை வேண்டினார். முன்செய்த வினையால் அவர்கள் சிவபெருமானை வேண்டியதும், சிவபெருமான் அவர்களை இணைத்து வைக்கத் திருவுளம் கொண்டார்.

அன்றிரவு சிவபெருமான் தனது அடியார்களின் கனவில் தோன்றி பரவையாருக்குச் சுந்தரமூர்த்தி நாயனாரைத் திருமணம் செய்து வைக்குமாறு கூறினார். மறுநாள் உதய காலத்திலே சிவபக்தர்கள் எல்லோரும் கூடிவந்து சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் பரவையாருக்கும் ஆகம விதிப்படி விவாகம் செய்து வைத்தனர்.

பரவையாரோடு சுந்தரமூர்த்தி நாயனார் இன்புற்று வாழ்ந்துவரும் நாளில் ஒருநாள் அவர் கோவிலுக்குச் சென்றபோது அங்கே ஏராளமான சிவனடியார்கள் கூடியிருந்தனர். அவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கிய சுந்தரமூர்த்தி நாயனார் சிவனின் அடியார்களைச் சிவன் என நினைத்து "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். அதன்பின்பு சிவனடியார்களை மக்கள் வணங்கும் நடைமுறை தமிழ்நாட்டிற்கு வந்தது.

சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரோடு திருவாரூரிலே வாழ்ந்துவரும் காலத்தில் குண்டையூர்க் கிழார் என்பவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் பெருமைகளைக் கேள்விப்பட்டு தினமும் வந்து அவரைத் தரிசித்துச் செல்வார். அத்துடன் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் திருவாரூரிலே இருக்கின்ற சிவனடியார்களுக்கும் தினந்தோறும் உணவுக்காக நெல் அனுப்பி வைத்தார். அந்த வருடம் மழை பெய்யாததால் குண்டையூர்க் கிழாரின் வயல்கள் அழிந்து விட்டன. அதனால் திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் வீரட்டானேஸ்வரருக்கும் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் நெல் அனுப்ப முடியவில்லையே என்று குண்டையூர்க் கிழார் கவலைப்பட்டார்.

அன்றிரவு குண்டையூர்க்கிழாரின் கனவில் தோன்றிய வீரட்டானேஸ்வரர்; "உமக்கு, சுந்தரனுக்கு அனுப்புவதற்கு நெல் தந்தோம்" என்று கூறி மறைந்தார். மறுநாள் காலை குண்டையூர் முழுவதும் நெல் மலையாகக் குவிந்து காணப்பட்டது. குண்டையூர்க் கிழார் அச் செய்தியை சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சொல்லி அவரைக் குண்டையூருக்கு அழைத்து வந்தார்.

நெற்குவியலைக் கண்டு அதிசயித்த சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானை நினைத்து; "நீள நினைந்தடியேன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி; "சுவாமி, இந் நெல்லைக் கொண்டு செல்ல என்னிடம் ஆளில்லை. அதனால் இதைக் கொண்டு வந்து வீட்டில் தரல் வேண்டும்" என்றார். அன்றிரவு பூதங்கள் குண்டையூரில் இருந்த நெல்லைக் கொண்டு சென்று சுந்தரமூர்த்தி நாயனாரின் வீட்டில் சேர்த்தன. இதனால் அடியார்கள் சுந்தரரின் மகிமையையும், சிவபெருமானின் கருணையையும் நினைத்து அதிசயித்தனர்.

சில நாட்கள் சென்ற பின்பு கோட்புலி நாயனாரின் வேண்டுகோளுக்கிணங்க சுந்தரமூர்த்தி நாயனார் அவரது ஊரான திருநாட்டியத்தான் குடிக்குச் சென்றார். சுந்தரைக் கண்டு மகிழ்ந்த கோட்புலி நாயனார் அவரை வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி விதிப்படி அருச்சனை செய்து அறுசுவை உணவுகளைக் கொடுத்தார். சுந்தரர் உண்ட பின் தனது புத்திரிகளான சிங்கடியார், வனப்பகையர் என்போரை அழைத்து வந்து சுந்தரரை நமஸ்கரித்து; "தேவரீர் எனது இரு புத்திரிகளையும் அடிமைகளாக ஏற்றருளல் வேண்டும்" என்றார்.

அதை எதிர்பார்க்காத சுந்தரமூர்த்தி நாயனார் அதிர்ச்சியடைந்தார். மனிதரை மனிதர் அடிமையாக்குதல் சிவத்துரோகம் என நினைத்தார்.

"இப் பெண்கள் இருவரும் எனக்குப் புத்திரிகள்" என்று கூறி அவர்களை ஆசீர்வதித்த சுந்தரர் பின் பரமசிவன் வீற்றிருக்கும் ஆலயத்தை அடைந்து திருப்பதிகம் பாடினார். அதனால் சுந்தரருக்குச் "சிங்கடியார்" என்ற பெயர் ஏற்பட்டது.

பங்குனி மாத உத்தரத் திருவிழாவைச் சிறப்பாகச் செய்வதற்கு பொன்தேவை என்று பரவையார் சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் சொன்னார். சுந்தரமூர்த்தி நாயனார் திருப்புகலூரை அடைந்து சுவாமியைத் தரிசனம் செய்து திருப்பதிகம் பாடிவிட்டு மடத்திற்குச் சென்றார். மடத்தில் இருந்த செங்கற்களைத் தலைக்கு அணையாக வைத்து உறங்கினார். நித்திரைவிட்டெழுந்து பார்த்தபோது தலைக்கு அணையாக வைத்த செங்கற்கள் யாவும் பொன் கற்களாக மாறி இருந்தன. அதைக் கண்டு மகிழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் கோயிலுக்குச் சென்று சிவபெருமானைத் தரிசித்து "தம்மையே புகழ்திச்சை பேசினும்" என்னும் பதிகத்தைப் பாடினார். பங்குனி மாத உத்தரத் திருவிழாச் செலவுக்குப் பரவையார் கேட்ட பொன்னைச் சுந்தரமூர்த்தி நாயனார் கொடுத்தார். அவ்வருடம் பங்குனி மாத உத்தரவிழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அதன்பின் பல சிவத்தலங்களுக்குச் சென்று திருப்பதிகங்கள் பலவும் பாடிய சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கூடலை ஆற்றுக்கு அருகில் இருந்த சிவத்தலத்திற்குச் செல்லாமல் திருமுதுகுன்றை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் சிவபெருமான் ஒரு பிராமண வடிவம் கொண்டு வழியில் நின்றார். அந்தப் பிராமணரிடம் சுந்தரமூர்த்தி நாயனார் திருமுதுகுன்றுக்குப் போகும் வழியைக் கேட்க, "இது கூடலை ஆற்றக்குப் போகும் வழி" என்று கூறி அவருக்கு முன் நடந்து சென்று மறைந்தார். சுந்தரர்

அத்தலத்தை தரிசித்து "வடிவுடை மழுவேந்தி" என்னும் திருப்பதிகத்தைப் பாடிவிட்டு திருமுதுகுன்றுக்குப் போனார். அச் சிவத்தலத்தில் திருப்பதிகம் பாடியபோது அவருக்கு சுவாமி பன்னீராயிரம் பொன் கொடுத்தார். அதற்குச் சுந்தரர் "சுவாமி, இப் பொன்னைத் தேவரீர் திருவாரூரிலே கொண்டு வந்து தந்தருளல் வேண்டும்" என்று வேண்டினார்.

"சுந்தரனே, நீ இப்பொன் முழுவதையும் மணிமுத்து நதியிலே போட்டுவிட்டு, திருவாரூர்க் குளத்திலே போய் எடு" என்றார்.

திருவாரூர் திரும்பிய சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரை அழைத்துக் கொண்டு வான்மீகநாதரின் கோயிலுக்குச் சென்று அவரை வணங்கிவிட்டு, அருகில் இருந்த குளத்தில் இறங்கிப் பொன்னைத் தேடினார்.

குளத்தில் பொன்வந்து சேரவில்லை. அதனால் குளம் முழுவதையும் தேடிப் பார்த்தார். பொன் வரவில்லை. அதில் ஏதோ குறை இருக்கிறது என்று சிவபெருமானை நினைத்தார்.

சுந்தரமூர்த்தி நாயனாரைக் கொண்டு திருப்பதிகம் பாடுவிக்க வேண்டும் என்று விரும்பிய வான்மீகநாதர் பொன்னை அக்குளத்திற்கு வருவிக்காது இருந்தார். நெடுநேரமாகப் பொன்னைத் தேடிய சுந்தரரைக் கண்ட பரவையார்; "ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் தேடினால் கிடைக்குமா...?" என்று கேலியாகக் கேட்டார்.

"கிடைக்கும். சிவபெருமான் என்னைச் சோதிக்கிறார். இது அவரது திருவிளையாடல்" என்றார்.

அதனால் மனம் வருந்திய சுந்தரர் "பொன் செய்த மேனியினீர்..." என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே ஆற்றிலிட்ட பொன் முழுவதும் குளத்திற்கு வந்து சேர்ந்தது. பொன்னை எடுத்த சுந்தரரும் பரவையாரும் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வீட்டுக்குச் சென்றனர்.

சிவத்தலங்கள் பலவற்றை அடியவர்களுடன் சுந்தரமூர்த்தி நாயனார் தரிசித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் திருக்குருகாவூருக்குச் செல்லும்போது சுந்தரமூர்த்தி நாயனாரும் அடியவர்களும் தாகத்தினாலும், பசியினாலும் வருந்தினார்கள். இதை உணர்ந்த சிவபெருமான் அவர் செல்லும் வழியில் ஒரு பந்தல் அமைத்து தண்ணீரும் பொதிசோறும் வைத்திருந்து சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் கொடுத்துவிட்டு மறைந்தார்.

தொண்டர்களும் சுந்தரரும் சிவனின் வருகையை எண்ணி மகிழ்ந்தனர்.

பின் தொண்டைமண்டலத்தில் இருக்கும் சிவத்தலங்களைத் தரிசிக்க விரும்பிய சுந்தரர், அடியார்களுடன் தொண்டைமண்டலத்திற்குச் சென்றார். ஒரு நாள் திருக்கச்சூரிலே ஆலய தரிசனம் செய்துவிட்டுப் பகல் உணவு உண்பதற்காக மடத்திற்குச் சென்று உணவு வரும் எனக் காத்திருந்தார். நேரம் சென்றதே தவிர உணவு வரவில்லை. பசியால் வருந்திய சுந்தரர் மடத்துச் சுவருடன் சாய்ந்திருந்தார். சுந்தரரின் பசியை உணர்ந்த சிவபெருமான் பிராமண வேடம் தாங்கி சுந்தரரிடம் வந்து சொன்னார்; "சுந்தரா, நீ பசியால் வருந்திக் களைத்துப்போய் இருக்கிறாய். நான் உணவு கொண்டு வரும்வரையும் இங்கேயே தங்கி இரு" என்று கூறிய சிவபெருமான் திருவோடு ஒன்றை எடுத்துச் சென்று பிராமணர்கள் வாழும் வீடுகளில் உணவை இரந்து பெற்றுக் கொண்டு வந்து சுந்தரருக்குக் கொடுத்துவிட்டு மறைந்தருளினார். சுந்தரர் சிவனின் அருளை வியந்து "முதுவாயோரி கதற" என்னும் திருப்பதிகத்தைப் பாடிவிட:டுச் சிவபெருமான் கொண்டு வந்த உணவைச் சிவனடியார்களுக்குக் கொடுத்துத் தானும் உண்டார்.

திருக்கைலாய மலையிலே சுந்தரமூர்த்தி நாயனார் மேல் காதல் கொண்ட அனிந்திகையார் ஞாயிறு என்ற ஊரிலே இருக்கும் ஞாயிறு கிழவர் என்பவருக்குப் புத்திரியாகப் பிறந்தார். ஞாயிறுகிழவர் அவருக்குச் சங்கிலியார் எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தார்.

மங்கைப் பருவத்தை அடைந்த சங்கிலியாருக்குப் பெற்றோர் வரன் தேடினார்கள். இதை அறிந்த சங்கிலியார் தகப்பனிடம் சொன்னார், "தந்தையே, நான் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் திருவருளைப் பெற்ற ஒருவருக்கே மனைவியாவதற்கு உரித்துடையேன். அதற்காக நான் திருவொற்றியூரை அடைந்து அங்கு கோவில் கொண்டிருக்கும் சிவபெருமானின் கோவிலிலே இருப்பேன்" என்றாள்.

அவளது சொற்களைக் கேட்டு மனம் வருந்திய ஞாயிறு கிழவர், அவளை அழைத்துச் சென்று திருவொற்றியூரில் ஒரு வீடு அமைத்து அங்கே இருக்கும்படி விட்டுவிட்டு வந்தார். சங்கிலியார் தினந்தோறும் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து பூமாலை கட்டிச் சிவனுக்குச் சூடக் கொடுப்பாள். ஒரு நாள் திருவொற்றியூரில் குடிகொண்டிருக்கும் சிவபெருமானை வணங்க வந்த சுந்தரர், சங்கிலியாரைக் கண்டு காதல் கொண்டார். அதனால் அவர் தனக்குச் சங்கிலியாரைத் திருமணம் செய்து

தரும்படி சிவனை வேண்டினார். அன்றிரவு சங்கிலியாரின் கனவில் தோன்றிய சிவபெருமான்; "சங்கிலியே, எனது பக்தனான சுந்தரன் உன்னை விரும்பியுள்ளான். அவனைத் திருமணம் செய்து நீ வாழ்வாயாக. அத்துடன் சுந்தரன் உன்னைவிட்டுப் பிரியேன் என்று சத்தியம் செய்து தருவான்" என்று கூறிவிட்டுச் சுந்தரரிடம் சென்ற சிவபெருமான்; "சுந்தரா, சங்கிலியாரை நீ திருமணம் செய்யலாம். ஆனால் அவளைவிட்டுப் பிரியேன் என்று அவளுக்குச் சத்தியம் செய்து கொடு" என்றார்.

"சுவாமி நான் சங்கிலிக்கு 'உன்னைவிட்டுப் பிரியேன்' என்று சத்தியம் செய்யும்போது தாங்கள் கோவிலைவிட்டு வெளியே சென்று மகிழ மரத்தின் கீழ் இருந்தருள வேண்டும்" என்றார் சுந்தரர்.

"சரி" என்று கூறிய சிவபெருமான் சங்கிலியாரிடம் சென்று; "பெண்ணே சுந்தரன் உன்னைத் திருமணம் செய்யச் சம்மதித்துள்ளான். அவன் சத்தியம் செய்ய வரும்போது மகிழமரத்தின் கீழ்ச் சத்தியம் செய்யச் சொல்லிக் கேள் என்று சொல்லி மறைந்தருளினார்.

மறுநாள் கோவிலுக்கு வந்த சுந்தரர் அங்கு தோழியர்களுடன் நின்ற சங்கிலியாரைச் சந்தித்து சிவபெருமான் கூறியதைச் சொல்லிச் சத்தியம் செய்யக் கோயிலினுள் வருமாறு அழைத்தார்.

சங்கிலியார் மகிழமரத்தின் கீழ்ச் சத்தியம் செய்து தரும்படி கேட்டார். சுந்தரர் மனக்கிலேசத்துடன் மகிழமரத்தின் கீழ்ச் சென்று: "உன்னை ஒரு பொழுதும் விட்டுப் பிரியேன்" என்று சத்தியம் செய்து கொடுத்தார். நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் சிவனடியார்கள் சுந்தரருக்கும் சங்கிலியாருக்கும் திருமணஞ் செய்து வைத்தனர். திருமணம் முடிந்தபோதும் சுந்தரமூர்த்தி நாயனார் மகிழ்வின்றி வாழ்ந்து வந்தார். பொய்ச் சத்தியம் செய்தமையால் தனக்குத் துன்பம் வந்து விடுமோ என அஞ்சினார்.

விவாகம் செய்த சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியாரோடு அவ்வூரிலே வாழ்ந்து வந்தார். ஒருநாள் திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் வான்மீக நாதரை வணங்குவதற்காகத் திருவாரூருக்குப் புறப்பட்டார். அவர் திருவொற்றியூரை விட்டு நீங்கியபோது அவரின் இரண்டு கண்களும் குருடாகின. சத்தியம் தவறியதால் தனது கண்கள் குருடாகி விட்டன என்று தெரிந்து கொண்ட சுந்தரர் அடியார்கூட்டத்துடன் திருவாரூரை அடைந்து வான்மீக நாதரைத் தொழுது பதிகங்கள் பாடினார். அவர்

பதிகங்கள் பாடிய போதும் குருடு நீங்கவில்லை. அதனால் கவலை கொண்ட சுந்தரர் சிவபெருமானை அழுதழுது தொழுதார். அதனால் இரங்கிய சிவபெருமான் இடக்கண்ணை மாத்திரம் தெரியும்படி செய்தார். அதன் பின்னர் சுந்தரர் சோழ நாட்டிற்குச் சென்றார். இருப்பினும் சுந்தரமூர்த்தி நாயனாரின் அச்சம் தீரவில்லை. சிவனால் என்னென்ன துன்பங்கள் வருமோ எனப் பயந்தார்.

சுந்தரர் திருவாவடுதுறைக்குச் சென்றபோது அவரைப் பெருநோய் வாட்டியது. அதனால் சிவபெருமானைத் தொழுதார். சிவபெருமானின் சொற்படி சுந்தரர் திருவாவடுதுறையில் உள்ள குளத்தில் குளிர்த்தார். குளித்ததும் அவரைப் பீடித்திருந்த நோய் நீங்கியது. பின் சுந்தரர் திருவாவடுதுறையில் வீற்றிருக்கின்ற வான்மீகநாதரைப் பிரார்த்தித்து, “மீளா அடிமை உமக்கே ஆளாய்” என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். வான்மீகநாதரின் அருளால் சுந்தரரின் வலக்கண்ணும் பார்வை பெற்றது. அதனால் மிகவும் மகிழ்ந்த சுந்தரர் சிவபெருமானை மனமுருகித் தொழுது தன்னைப் பரவையாருடன் சேர்த்து வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

சுந்தரருடன் கூட வந்த சிவனடியார்கள் பரவையாரின் வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டுச் சென்று இடைவழியில் பயத்தால் திரும்பி வந்தனர். சங்கிலியாரைத் திருமணம் செய்ததை அறிந்த பரவையார் கோபம் கொண்டிருந்தார். சுந்தரர் பரவையாரிடம் செல்ல அஞ்சிப் பெரியோர் சிலரை அவரிடம் அனுப்பிச் சமாதானம் செய்ய முயன்றார். அதற்குப் பரவையார் ஒத்துக் கொள்ளாமையால் சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைப் பரவையாரிடம் தூது அனுப்பினார்.

தன்னிடம் சமாதானம் செய்ய வந்தவர் சிவன் என அறியாத பரவையார் அவரை ஏசி அனுப்பி விட்டார். நடந்தவற்றைச் சுந்தரரிடம் சிவபெருமான் கூறியபோது சுந்தரர் மனம் வருந்தித் தன்னைப் பரவையாருடன் சேர்த்து வைக்கும்படி இரந்தார். அதனால் மனம் இரங்கிய சிவபெருமான் மீண்டும் பரவையாரிடத்திற் சென்றார். சுந்தரரின் தூதுவராக வந்தவர் சிவபெருமான் என்பதை அறிந்த பரவையார் மகிழ்ந்து வணங்கித் தான் முன்பு மறுப்புச் சொன்னதற்காக மன்னிப்புக் கேட்டார். அதன்பின் சுந்தரர் சிவனடியார் கூட்டத்துடன் பரவையாரின் வீட்டுக்குச் சென்று அவரோடு மகிழ்வுடன் வாழ்ந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைப் பரவையாரிடம் தூது அனுப்பியதை அறிந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் சுந்தரரின் மிது அளவில்லாத கோபம்

கொண்டார். அதனால் சிவபெருமான் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குச் சூலைநோயை உண்டாக்கினார். பின் அவரின் கனவிலே தோன்றி "சுந்தரரால் அன்றி உன்நோய் தீராது" என்று கூறிவிட்டுச் சுந்தரரிடம் சென்று "ஏயர்கோன் கலிக்காமரது சூலைநோயைச் சென்று தீர்த்து வைப்பாயாக" என்றார்.

சுந்தரர் தனது வீட்டுக்கு வருவதை அறிந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் தனது உடைவாளினால் தனது வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்து போனார். அதைக்கண்டு வருந்திய சுந்தரமூர்த்தி நாயனார் அவ்வாளை எடுத்துத் தனது வயிற்றைக் கிழிக்க ஆயத்தமானார். அப்பொழுது சிவபெருமான் அருளால் உயிர் பெற்றெழுந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் சுந்தரமூர்த்தி நாயனாரின் கையைப் பிடித்தார். அதன் பின்பு இருவரும் நண்பர்கள் ஆயினர்.

திருவாரூரில் சுந்தரமூர்த்தி நாயனார் இருப்பதையும் அவரின் பெருமைகளையும் சிவபெருமான் மூலம் அறிந்த சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரரைத் தரிசிப்பதற்காகத் திருவாரூருக்கு வந்தார். சுந்தரரைத் தரிசித்து வணங்கிய சேரமான்பெருமாள் நாயனார் அதன்பின் அவருடனே இருந்தார். இருவரும் சிவனடியார்களுடன் சேர்ந்து தமிழ் நாட்டில் உள்ள சிவத்தலங்களைச் சென்று தரிசித்தனர். அப்படித் தரிசித்து வரும் நாளில் ஒருநாள் இருவரும் இராமேஸ்வரத்திற்கு வந்தனர். சுந்தரர் அங்கிருந்து கொண்டே ஈழநாட்டில் மாதோட்டம் என்னும் நகரில் அமைந்துள்ள கேதீச்சரத்தானை வணங்கி "நத்தார்படை ஞானன்பசு" என்னும் திருக்கேதீச்சரப் பதிகத்தைப் பாடினார்.

அதன்பின் சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனாரின் வேண்டுகோளுக்கிணங்க அவரின் ஊரான கொடுங்கோலூருக்குப் புறப்பட்டார். அப்பொழுது வடகரையில் இருக்கின்ற காவேரியாறு பொங்கிப் பெருகியது. அதனால் அவ்வாற்றைக் கடக்கமுடியாது சுந்தரரும், சேரமான்பெருமாள்நாயனாரும், சிவனடியார்களும் ஆற்றங்கரையில் நின்றனர். சுந்தரர் சிவனை வணங்கிப் பதிகம் ஒன்றைப் பாடினார். உடனே காவேரியாறு இரண்டாகப் பிரிந்து வழிவிட்டது. அடியார்கள் எல்லோரும் நதியின் மத்தியில் இருந்த மணல்வழியே சென்று திருவையாற்றை அடைந்து சுவாமி தரிசனம் செய்தவிட்டு கொடுங்கோல் என்ற ஊரைச் சென்றடைந்தனர். சில காலம் சேரமான் பெருமாள் நாயனாரோடு தங்கிய சுந்தரமூர்த்தி நாயனார் தனது ஊருக்குப் புறப்பட்டார். சேரமான் பெருமாள் நாயனார் அவரை வணங்கி ஏராளமான பொன்களையும், முத்தையும், திரவியங்களையும் கொடுத்தார்.

சிவனடியார்கள் அப்பொருட்களைச் சுமந்து கொண்டு காட்டினூடாகச் சென்றனர். அப்பொழுது சிவபெருமான் தனது பூத கணங்களை வேடுவரூபத்தில் அனுப்பி அத்திரவியங்களைக் கவர்ந்தார். சுந்தரர் அக்காட்டுக்குள் இருந்த திருக்கோயிலினுட் சென்று பதிகம் பாடினார். சிவனின் அருளால் பூதகணங்கள் தாம் கவர்ந்து சென்ற பொருட்களைக் கொண்டு வந்து கோவில் வாசலிற் குவித்தன.

சிலநாட்கள் திருவாரூரில் தங்கியிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான் பெருமாள் நாயனாரைச் சந்திப்பதற்காக கொடுங்கோல் என்னும் ஊருக்குச் சென்றார். வழியிலே இருந்த ஒரு வீட்டில் மங்கல ஒலியும் இன்னொரு வீட்டில் அழுகை ஒலியும் கேட்டது. அங்கு சென்ற சுந்தரர் நடந்தது என்னவென விசாரித்தார்.

அங்கிருந்த பிராமணர்கள் அவரை வணங்கி: "ஐந்து வயதுடைய இரு பிராமணச் சிறுவர்கள் குளத்திற்குக் குளிக்கச் சென்றார்கள். அதில் ஒரு பிள்ளையை முதலை விழுங்கிவிட்டது. மற்றப் பிள்ளை தப்பி விட்டது. தப்பிய பிள்ளைக்கு உபநயனஞ் செய்கிறார்கள். அவ்வீட்டில் மங்கல ஒலிச் சத்தம் கேட்கிறது. இறந்த வீட்டில் புதல்வனை நினைத்து அழும் ஒலி கேட்கிறது" என்றார்கள்.

அதைக்கேட்டு மனம் இரங்கிய சுந்தரமூர்த்தி நாயனார் சிறுவனை முதலை விழுங்கிய குளக்கரைக்குச் சென்று பதிகம் பாடினார். சிவபெருமானின் கிருபையால் முதலை தான் விழுங்கிய சிறுவனைக் கரையில் வந்து உமிழ்ந்தது. சிறுவனும் பெற்றோரும் அவ்வூரவர்களும் பெருமகிழ்வுடன் சுந்தரரை வணங்கினார்கள்.

அச் செய்தியைக் கேள்விப்பட்ட சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரரைக் காணும் ஆவலால் அவ்விடத்திற்கு விரைந்து வந்தார். இருவரும் கட்டித் தழுவி உரையாடி மகிழ்ந்தனர். பின்னர் இருவரும் சேர்ந்து பல சிவத்தலங்களைத் தரிசித்தனர்.

இப்படிப் பல நாட்கள் சென்றன. ஒரு நாள் சேரமான் பெருமாள் நாயனார் குளித்துக் கொண்டிருக்கும்போது சுந்தரமூர்த்தி நாயனார் திருவாஞ்சைக் களத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார். அப்பொழுது சிவபெருமானின் கட்டளையின் பெயரில் பிரமாவும், விட்டுணுவும் வெள்ளை யானையில் வந்து சுந்தரரைத் திருக்கலையாய மலைக்கு அழைத்துச் சென்றனர். இதைக் கேள்விப்பட்ட சேரமான் பெருமாள் நாயனார் தனது வெள்ளைக் குதிரையின் மீது ஏறி அதன் காதில் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதினார். உடனே குதிரை ஆகாயத்தில் பறந்து சென்று வெள்ளை யானையை வலம் வந்தது. சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனாரை முன்னே செல்ல விட்டு தான் பின்னே சென்றார்.

வானத்தில் பறந்து சென்ற சுந்தரரையும் சேரமான் பெருமாள் நாயனாரையும் காணாத சிவனடியார்கள் அவர்கள் இன்றி வாழ முடியாமையினால் உடைவாளினால் தங்களது தலைகளை துண்டித்தனர். திருக்கைலாயமலை வாசலை அடைந்த சேரமான் பெருமாள் நாயனாரை அங்கு காவலுக்கு நின்ற பூதகணங்கள் உள்ளே செல்லவிடாது தடுத்தன.

சுந்தரமூர்த்தி நாயனார் அன்பு மிகுதியால் ஓடிச் சென்று சிவபெருமானின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். அவரைச் சிவபெருமான் அன்புடன் அணைத்தெடுத்தார்: "சுவாமி எனது நண்பரான சேரமான் பெருமாள் நாயனார் என்னுடன் வந்து வாசலில் நிற்கிறார். அவரையும் அழைத்தருளல் வேண்டும்" என்றார். உடனே சிவபெருமான் அவரை அழைத்து: "நீயும் ஆலாலசுந்தரனும் கணங்களுக்குத் தலைவர்களாக இருங்கள்" என்றார். சுந்தரரினதும் சேரமான் பெருமாள் நாயனாரதும் பிரிவைப் பொறுக்க முடியாது சிரச்சேதம் செய்து கொண்ட அடியார்களும் திருக்கைலாயமலையைச் சென்றடைந்து சுந்தரருடன் சேரமான் பெருமாள் நாயனாருடனும் சேர்ந்து கொண்டனர்.

பரவையாரும் சங்கிலியாரும் திருக்கைலாயமலைக்கு வந்து உமாதேவியாருக்குத் தொண்டு செய்தனர்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் அற்புதங்களைச் சித்தாந்த சாத்திர நூலான திருக்களிற்றுப்படியார் பின்வருமாறு கூறுகிறது.

"மோகம் அதிறுத்திடின் நாம் முத்தி – கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர் – தம்மைத் தோகையர்பால்
தூதாகப் போகவிடும் வன்றொண்டன் - தொண்டுதனை
ஏதாகச் சொல்லவே னியான்."

சமயகுரவர் நால்வருக்குமாகச் செய்யப்படும் வணக்கத்தின், ''வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி'' என்று சுந்தரர் போற்றப்படுகிறார். இறைவனோடு தோழமைபூண்டு வாழ்ந்த சுந்தரர் யோகநெறியில் நின்றவராவார்.

சுந்தரரை நம்பியாரூரர், ஆளுடைய நம்பி, வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், சிங்கடியப்பன், வனப்பகை அப்பன் என மக்கள் அன்புடன்

அழைத்தனர். இவரது காலம் கி. பி. 840 – 865 என்பது டாக்டர் மா. இராசமாணிக்கனார் கூறுகிறார். இதில் பல ஆராய்ச்சியாளர் முரண்படுகின்றனர்.

**சுந்தரமூர்த்தி நாயனார் செய்த அற்புதங்கள் :**

1. சிவனிடம் பொன்னைப் பெற்று ஆற்றில் இட்டுக் குளத்தில் எடுத்தது.
2. செங்கற்களைப் பொன்கற்களாக்கியது.
3. காவோரி ஆறு பிரிந்து வழிவிட்டது.
4. முதலை விழுங்கிய பிள்ளையை மீட்டது.
5. தேவர்கள் வெள்ளை யானையில் ஏறிச் சென்றது.

சுந்தரமூர்த்தினாயனாரின் தேவாரங்கள் நம்பியாண்டார் நம்பியால் ஏழாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

# மாணிக்கவாசக சுவாமிகளின் வரலாறு

மாணிக்கவாசகர் பாண்டிநாட்டிலுள்ள திருவாதவூரில் பிறந்தார். இவரது பிறப்புப் பற்றியும், இவரது பெற்றோர் பற்றியும் இதுவரை யாரும் எழுதவில்லை. அத்துடன் இவரது காலம் பற்றி ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. நம்பியாண்டார் நம்பியும் பட்டணத்துப் பிள்ளையாரும் இவரைப் பற்றிக் கூறியுள்ளனர். அதிலிருந்து இவர் அவர்கள் வாழ்ந்த காலத்தவர். அல்லது அவர்களுக்கு முந்தியவர் என்று கருதப்படுகிறார். இராசஇராச மன்னன் நம்பியாண்டார் நம்பியின் காலத்தவர். இவ்வரசனின் காலத்தில் தான் மாணிக்கவாசகரால் திருவெம்பாவையும் திருச்சாழலும் ஓதப் பெற்றமையால் இக்காலத்தவர் மாணிக்கவாசகர் என்று சில ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இம் மன்னனின் ஆட்சிக்காலம் கி. பி. 1063 – 1069 வரையாகும். இக்காலத்தில் தான் மாணிக்கவாசகர் வாழ்ந்தார்.

மாணிக்கவாசகர் திருவாதவூரில் பிறந்தமையால் அவர் வாதவூரர் என்று அழைக்கப்பட்டார். அவர் மிகவும் திறமைசாலியாகவும், வேத உபநிடதங்களைக் கற்றுத் தேர்ச்சி மிக்கவராகவும் இருந்தமையால் அவரைப் பாண்டிய மன்னனின் அரச சபையில் அமைச்சராகப் பணியாற்றும்படி பாண்டிய மன்னன் கேட்டுக் கொண்டதற்காக ஒப்புக்கொண்டு அமைச்சராகப் பணிபுரிந்தார். பாண்டிய மன்னன் அவர் பிராமண குலத்தைச் சேர்ந்தவர் என்றுதான் தனது அமைச்சராக அவரை நியமித்தான். அவரின் கலைத்திறன், கல்வியறிவு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பாராட்டிய அரிமர்த்தன பாண்டியன் அவருக்குத் 'தென்னவன் பிரமராயன்' என்ற சிறப்புப் பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தான். திருவாதவூரர் தனது கடமைகளை மிகச் சிறப்புடன் செய்து வந்தமையால் மன்னனின் பாராட்டையும், மக்களின் பாராட்டையும் பெற்றார். இருப்பினும் அவருக்கு உலக வாழ்வில் பற்று உண்டாகவில்லை. சிவனையே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டு தனது கடமையைச் சிவசேவையாகச் செய்து வந்தார்.

அப்படி அவர் வாழ்ந்து வரும்நாளில் அவ்வூர்க் கீழைக்கற்கரையில் நல்ல இனக் குதிரைகள் விற்பனை செய்யப்படுவதாகக் கேள்விப்பட்டு, வாதவூரரை அழைத்து தேவைக்கதிகமான பொன்னைக் கொடுத்து நல்ல இனக் குதிரைகளை வாங்கி வருமாறு அரசன் பணித்தான். அவர் பரிவாரங்களுடன் கடற்கரைக்குப் புறப்படும்போது சிவனை வணங்கித் தன்னை ஆட்கொள்ளும்படி வணங்கினார்.

சிவனை வணங்கிய வாதவூரர் தனது பரிவாரங்களுடன் திருப்பெருந்துறையை அடைந்தபோது அருகில் இருந்த சோலையிலிருந்து சிவநாமம் ஒலிப்பதைக் கேட்டார். அவர் அச் சோலைக்குச் சென்று பார்த்தபோது குருந்தமர நிழலில் ஓர் அருட்குரவர் எழுந்தருளியிருந்தார். அவரைச் சூழப் பல சிவனடியார்கள் வீற்றிருந்தனர். அந்த அருட்குருவைக் கண்டவுடன் மாணிக்கவாசகரின் உடல் சிலிர்த்தது. மனம் சிவனை நாடியது. ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. அவர் இதுவரை பெறாத ஓர் புதிய அனுபவலம் ஏற்பட்டது. அவர் தன்னை மறந்து ஆடிப்பாடினார். கூடவந்த பரிவாரங்களால் அவரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர், “சிவனே, என்னை ஆண்டருள், ஆண்டருள்” எனப் புலம்பினார். அருட்குரவர் அதைக்கேட்டு ஆனந்தமடைந்து எழுந்து ஓடோடி வந்து அவரின் தலையில் தனது திருவடியைப் பதித்தார். அத்துடன் திருவைந்தெழுத்தை அவரது செவியில் ஓதி, கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள்களின் உண்மையை விளக்கினார். விளக்கியதும் ஞானவாணியான சரசுவதி அவரது நாவில் வந்து குடியேறினாள். அதனால் வாதவூரர் மாரி மழை பொழிவதுபோலத் திருவாசகம் என்னும் தேனைப் பாடத் தொடங்கினார். அவர் முதன் முதலாகப் பாடியது “சிவபுராணம்” சிவனது அனாதி முறைமையான பழைமை வாய்ந்த வரலாறே சிவபுராணமாகும்.

திருவாசகம் பொருள் பொதிந்த மணி மணியான தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் மாலையாகும். அருட்குரவர் மெய்மறந்து ஆனந்தக் கூத்தாடிச் சிவனின் பழமையான வரலாற்றை ஏற்று அங்கீகரித்தார். அவர் மட்டற்ற மகிழ்வுடன் அவரைக் கட்டித்தழுவி “மாணிக்கவாசகர் என்னும் பட்டத்தைச் சூட்டினார். அக்கணமே மாணிக்கவாசகர் தன்னை மறந்து சிவநினைவுக்குட்பட்டார். அதனால் தனது பொறுப்புக்களை மறந்தார். தனது ஆடம்பர ஆடைகளைக் களைந்து விட்டுத் துறவுக்கோலம் பூண்டார். கன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அருட்குரவரின் திருவடியில் ஒப்படைத்தார். அவரை விட்டு நீங்காது அருகில் இருந்து பணிவிடை செய்தார். குதிரை வாங்குவதற்காகக் கொண்டு வந்த திரவியத்தைக் கோவில்களுக்கும், சிவனடியார்களுக்கும் கொடுத்தார்.

மாணிக்கவாசகரது உண்மைநிலையைப் புரியாதர அரசனின் பரிவாரங்கள், அவருக்குப் பித்துப் பிடித்துவிட்டது என்று நினைத்தனர். “பித்துப் பிடிக்காவிட்டால் மன்னன் குதிரை வாங்கக் கொடுத்த பெருந்தொகையான திரவியங்களைச் சிறிதும் அச்சமின்றி வருவோர் போவோர்க்கெல்லாம் கொடுத்துவிட்டுத் துள்ளி விளையாடுவாரா என்று எண்ணினர். அதனால் பயந்த வீரர்கள் ஓடிச்சென்று மாணிக்கவாசகரது செயற்பாடுகளை விபரமாகக் கூறினர். அதைக்கேட்டுக் கோபமடைந்த பாண்டிய மன்னன்

வீரர்களை அனுப்பி அவரை அழைத்து வருமாறு கூறினான். மாணிக்கவாசகர் ஓலையை வாங்கி வாசிக்காது அதைக் கொண்டு வந்தவனை வாசிக்கச் சொன்னார். அதில்; "உடனே குதிரைகளுடன் வருக" என்றிருந்தது.

"சிவனின் அடியவனான எனக்குப் பாண்டியன் எப்படிக் கட்டளையிட முடியும்?" என்று மாணிக்கவாசகர் அருட்குரவரைக் கேட்டார்.

"உனக்கு யாரும் கட்டளையிட முடியாது. நீ உடனே மதுரைக்குச் சென்று ஆவணி மூலநாளில் குதிரைகள் வந்து சேரும் என்று பாண்டியனுக்குச் சொல்" என்று கூறிப் பாண்டிய மன்னனுக்குக் கொடுக்குமாறு ஒரு அழகிய மாணிக்கல்லைக் கொடுத்தார். குருவின் சொற்படி மாணிக்கவாசகர் மதுரையை வந்தடைந்தார்.

பாண்டியனின் அரச சபைக்கு வந்த மாணிக்கவாசகர்; "நல்ல இனக் குதிரைகள் பலவற்றை வாங்கியுள்ளேன். அவை திருப்பெருந்துறையில் உள்ளன. ஆவணி மூல நன்நாளில் அவை இங்கு வந்து சேரும்" என்றார். அதன்பின் அருட்குரவர் பாண்டியமன்னனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்த பெறுமதி மிக்க மாணிக்கக்கல்லை மன்னனுக்குக் கொடுத்தார்.

குதிரைகள் வருகின்றன என்ற செய்தி மன்னனுக்குப் பெரு மகிழ்வைக் கொடுத்தது. அத்துடன் மன்னனின் கையில் இருந்த மாணிக்கக்கல்லின் பிரகாசமான ஒளி அதன் பெறுமதியைக் கூறியது. அதனால் மன்னன் மிக்க மகிழ்சியடைந்தான். அதை மன்னனுக்கு மாணிக்கவாசகரைப் பற்றித் தவறாகக் கூறியவர்களுக்குப் பிடிக்கவில்லை. தாம் பொய்கூறியதாக மன்னன் தம்மைத் தண்டித்து விடுவான் என அவர்கள் பயந்தனர். அத்துடன் மாணிக்கவாசகர் குதிரைகள் வாங்கக் கொடுத்த திரவியங்களைத் தம்மெதிரே மாணிக்கவாசகர் சிவனடியார்களுக்குக் கொடுத்ததையும், குதிரைகள் வாங்கச் சென்ற கடற்கரைக்குச் செல்லாததையும், உணர்ந்து பாண்டியனின் அருகே சென்று; "மன்னா, மாணிக்கவாசகர் பொய் கூறுகிறார். நாம் அறிந்த வகையில் அவர் குதிரைகளை வாங்கவில்லை. அத்துடன் பைத்தியம் பிடித்தவர்போலத் தாங்கள் கொடுத்த திரவியங்களை அவர் சிவனடியார்களுக்குக் கொடுத்ததை நாம் கண்டோம். குதிரைகள் வாங்கப்படவும் இல்லை. அவை திருப்பெருந்துறையிலும் இல்லை" என்றனர். மன்னன் தனது ஒற்றர்களைத் திருப்பெருந்துறைக்கு அனுப்பி அங்கே குதிரைகள் நிற்கின்றனவா என அறிந்து வரச் சொன்னான். திருப்பெருந்துறைக்கு சென்ற ஒற்றர்கள் அங்கு குதிரைகளைக் காணவில்லை என்றனர். அதனால் கோபம் கொண்ட பாண்டிய மன்னன் தண்டலாளரை அழைத்து மாணிக்கவாசகரிடம் கொடுத்த பணத்தை

அறவிடுமாறு பணித்தான். தண்டலாளர்கள் மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினர். அதைப் பொறுக்க முடியாது சிவபெருமான் மாணிக்கவாசகருக்கு உதவ விரும்பினார்.

அன்று ஆவணி மூலம். நல்ல செழுமையான உயர்தரக் குதிரைகள் பாண்டிய மன்னனின் அரண்மனைக்கு வந்தன. அவற்றின் குளம்பொலிகேட்டுப் பாண்டியன் வெளியே வந்தான். கம்பீரமான பல சிறந்த குதிரைகள் அரண்மனை வாசலில் நின்றன. அதைக்கண்ட பாண்டிய மன்னன் மனம் குளிந்து மகிழ்ந்தது. உடனே மாணிக்கவாசகரை விடுதலை செய்து தன்னிடம் அழைத்து வருமாறு கூறினான்.

அங்கு வந்த மாணிக்கவாசகர் கம்பீரமான குதிரையின்மீது மிகவும் செருக்குடனும், கம்பீரத்துடனும் வீற்றிருந்த குதிரைப்படைத் தளபதியைப் பார்த்தார். அது திருப்பெருந்துறையில் தன்னை ஆட்கொண்ட அருட்குரு எனத் தெரிந்து கொண்டார். அதன்பின் குதிரைத் தலைவரை அரசனுக்கு அறிமுகம் செய்தார். குதிரைத் தலைவனின் மிடுக்கான தோற்றத்தைக் கண்ட பாண்டிய மன்னன் எழுந்து நின்று அவரை வணங்கினான். பின் செருக்குடன் தனது இருக்கையில் அமர்ந்தான். குதிரைப்படைத் தளபதி குதிரைகளைப் பரிசீலித்துவிட்டு, "மிகவும் அருமையான குதிரைகள்" என்றான். அதனால் மகிழ்ந்த பாண்டியன் குதிரைத் தலைவனுக்குப் பரிசளிக்க விரும்பினான். பரிசைக் கொடுத்தபோது அதை அவன் குதிரைகளை ஓட்டி வந்த கோலை நீட்டிப் பெற்றுக் கொண்டான். அது பாண்டியனுக்குப் பிடிக்கவில்லை. அதை உணர்ந்த மாணிக்கவாசகர்; "அது அவர்களது நாட்டு வழமை" என்றார்.

புதிதாக வாங்கப்பட்ட குதிரைகள், பாண்டியனின் குதிரைப் பந்தியில் விடப்பட்டன. மாணிக்கவாசகர் தனது வீட்டுக்குச் சென்றார். மன்னன் அந்தப்புரத்துக்குச் சென்றான்.

அன்று இரவு குதிரைகளின் பந்தியில் புதிதாகச் சேர்க்கப்பட்ட குதிரைகள் யாவும் நரிகளாக மாறிப் பந்தியில் நின்ற ஏனைய குதிரைகளைக் கடித்துக் குதறின. பின் அவை தப்பி மதுரை வீதிகளில் ஓடி ஊளையிட்டன. சில வீடுகளில் நுழைந்ததால் மக்கள் பயந்து வீதியெங்கும் சிதறி ஓடினர். மொத்தத்தில் மதுரை நகரம் அல்லோல கல்லோலப்பட்டது. விடிந்ததும் அவை ஊரைவிட்டுக் காட்டுக்கு ஓடின.

தன்னை மாணிக்கவாசகர் நன்றாக ஏமாற்றிவிட்டார் என்று கடும்கோபம் கொண்ட பாண்டியமன்னன் மீண்டும் தண்டலாளர்களை அழைத்து மாணிக்கவாசகர்

தன்னை ஏமாற்றிவிட்டதால் அவரைக் கொடூரமாகத் தண்டிக்குமாறு கூறினான். அத்துடன் தான் கொடுத்த திரவியங்களை எப்படியாவது மீட்டுத் தருமாறும் கட்டளையிட்டான். கொடிய தண்டனைகளை தண்டலாளர்கள் வழங்கியபோதும் மாணிக்கவாசகர் எதுவும் பேசாது சிவனையே நினைத்துக் கொண்டிருந்தார். அதனால் நடுவெய்யிலில் அவரை நிறுத்தி அவரின் நெற்றியின்மீது தண்டலாளர்கள் கல்லை வைத்தனர். இருந்தபோதும் மாணிக்கவாசகர் எதுவும் பேசாது சிவனை நினைத்துக் கொண்டிருந்தார். இடி இடிக்கவில்லை, மின்னல் அடிக்கவில்லை, மழை பெய்யவில்லை. ஆனால் வைகை ஆறு பெருக்கெடுத்தது. அது ஊழிவெள்ளம்போல இருந்தது. மக்கள் பயந்தனர். மதுரை நகரை அழித்துவிடும் என நினைத்தனர். சிவனின் அருளைப் பெற்ற மாணிக்கவாசகரைத் துன்புறுத்தியமையால்தான் இந்நிலை ஏற்பட்டதென்று பெரியவர்கள் கூறக்கேட்ட பாண்டிய மன்னன் மாணிக்கவாசகரைத் தேடிவந்து நாட்டைக் காப்பாற்றுமாறு இரந்தான். மாணிக்கவாசகர் மனமுருகிச் சிவனை வேண்டித் திருவாசகத்தைப் பாடினார். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் வைகையாற்றின் வேகத்தைத் தணித்தார். பொங்கியெழுந்த வைகைநதி அடங்கியது.

வெள்ளம் அணையை மீறிப் பாய்ந்தமையால் அணையின் பெரும்பகுதி உடைந்து சிதைந்துவிட்டது. அதனால் அரசன் மக்களை அழைத்து ஒவ்வொருவருக்குமுரிய பங்கை அளந்துவிட்டு அதைக்கட்டுமாறு பணித்தான்.

மதுரையிலே செம்மனச் செல்வி என்றொரு மூதாட்டி வசித்து வந்தாள். அவள் எந்நேரமும் சிவனையே தொழுது வந்தாள். அவள் ஒரு பெரும் சிவபக்தை. அவளுக்கு உற்றார், உறவினர், பிள்ளைகள் எவரும் இல்லை. அவள் எல்லாம் சிவன் என்று நினைத்து வாழ்பவள். தனது சீவியத்திற்காகப் பிட்டு அவித்து விற்று வந்தாள். மக்கள் எல்லோரும் மன்னனின் ஆணைப்படி அணையைக் கட்டத் தொடங்கினர். பிட்டு விற்கும் செம்மனச் செல்விக்குக் கூலிக்குக் கட்டக்கூட யாரும் வரவில்லை. அதனால் அதைச் சிவனிடம் முறையிட்டு வணங்கினாள். அப்போது அந்த வழியாக ஓர் அழகிய இளைஞன் வந்தான். அவன் தலைப்பாகை கட்டியிருந்தான். தோளில் மண்வெட்டி இருந்தது. அதில் ஒரு கூடையைச் செருகி இருந்தான். அவன் செம்மனச் செல்வியிடம் வந்து, “அம்மையே, நான் அயலூரவன். ஆறு பெருக்கெடுத்தமையால் ஆற்றின் அணையைக் கூலிக்குக் கட்டலாமென வந்தேன்” என்றான். வெசம்மனச் செல்வி மனம் மகிழ்ந்து, “மகனே, நான் மிகவும் ஏழை. எனக்கு உற்றார், உறவினர் எவரும் இல்லை. நீ அணையைக்கட்டு. நான் பிட்டு அவித்து விற்பவள். பிட்டை விற்றுவிட்டுக் கூலி தருகிறேன்” என்று கூறியபடி ஆற்றங்கரையோரமாக நடந்து வந்த செம்மனச் செல்வி தனக்கு அரசனால் பிரித்துக் கொடுத்த இடத்தைக் காட்டினாள்.

“அம்மையே, நீ பிட்டை விற்றுவிட்டு கூலிதரத்தேவையில்லை. அவிக்கும் போது உதிர்ந்த பிட்டை எனக்குத் தா. அது போதும்” என்றான். செம்மனச் செல்வி மிக்க மகிழ்வுடன் உதிர்ந்த பிட்டையும் நல்ல பிட்டுக்களையும் கொடுத்தாள். “அம்மையே, இவ்வளவு சுவையான பிட்டை நான் இதுவரை உண்ணவில்லை” என்று சொல்லிச் சொல்லி உண்டான் அந்த வேலையாள்.

உண்டு முடித்ததும் அவன் உண்ட களை நீங்கச் சற்றுக் கண்ணயர்ந்தான். பின்பு சிறிது நேரம் வேலை செய்தான். இப்படியே அன்று முழுவதும் வேலை செய்தான்.

மாலையானதும் அரசன் அணைகட்டப்படுவதைப் பார்வையிட வந்தான். செம்மனச் செல்வியின் பகுதி கட்டப்படாதிருந்தது. ஏனையோர் கட்டி முடித்திருந்தனர். அரசன் கட்டப்படாது இருந்த பகுதி யாருடையது என்று கேட்க அங்கு நின்ற ஒருவன்; “அரசே இது பிட்டு விற்றுச் சீவனம் நடத்தும் ஒரு மூதாட்டியின் பங்கு. அம்மூதாட்டி கூலிக்கு ஒருவனை அமர்த்தினாள். அவன் நன்றாக உண்டுவிட்டு மரநிழலில் படுத்து உறங்குகிறான்” என்றான்.

அரசன் அவனைப் பார்த்தான். அவன் நல்ல வாட்டசாட்டமானவனாகவும், பலம் மிக்கவனாகவும் காணப்பட்டான். அதனால் கோபங் கொண்ட அரசன் தனது கையில் வைத்திருந்த பிரம்பால் அவனை அடித்தான். அடித்தவுடன் அந்த இளைஞன் மாயமாக மறைந்து விட்டான். அரசன் அடித்த அடி அரசனின் முதுகில் பட்டது. அத்துடன் எல்லா உயிர்கள் மீதும் பட்டது. மாணிக்கவாசகருக்காகச் சிவபெருமான் அத்திருவிளையாடலை நிகழ்த்தினார் என்று அனைவரும் நினைத்தனர்.

பாண்டிய மன்னன் மாணிக்கவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கியும், வைகை நதியைப் பெருக்கெடுக்கப் பண்ணியமையையும் எண்ணிப் பயங்கொண்டு மாணிக்கவாசகரைத் தேடி வந்து வணங்கி மன்னிப்புக்கோரினான். அதன்பின் தனது இராச்சியத்தை ஏற்கும்படி கூற மாணிக்கவாசகர்; “மன்னா, சிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடியாடி அவனையடைதலே எனது நோக்கம். எனக்கு நாடு நகரம் வேண்டாம்” என்றார்.

அதன்பின் மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக்குச் சென்று தன்னை ஆட்கொண்ட அருட்குருவையும், சிவனடியார்களையும் கண்டு அவர்களை வணங்கி அருட்குருவை நோக்கித் தனக்கு முத்தியடைவதற்கான வழிவகைகளைக் கூறுமாறு கேட்டார்.

அதற்கு அருட்குரு, “மாணிக்கவாசகனே, உனக்குப் பூமியில் பிறந்ததற்கான கடமை முடியவில்லை. பூமியில் உள்ள சிவத்தலங்களுக்குச் சென்று சிவசேவை செய். அத்துடன் சிவனை உனது பாடல்களால் ஆராதித்து வணங்கு. உரியவேளை வந்ததும் உன்னை நான் தில்லைக்கு அழைத்து முத்தியளிப்பேன்” என்றார்.

வந்தவேலை முடிந்தமையால் அருட்குருவரான சிவபெருமானும் அவருடன் வந்த சிவனடியார்கள் சிலரும் சிவலோகம் செல்லத் தீர்மானித்தனர். அப்போது கோவிலில் இருந்த குளத்தில் சோதிப்பிழம்பு ஒன்று தோன்றியது. அதிற்புகுந்த அருட்குரவரும் அவருடன் வந்த சிவனடியார்களும் சிவலோகம் சென்றனர். மாணிக்கவாசகர் தனியாக நின்றார். அவர்களுடன் செல்லாதது அவருக்குப் பெருங் கவலையைக் கொடுத்தது. அருட்குரு தன்னைக் கூறியபடி அழைக்கும்வரை சிவபெருமானைப் போற்றித் துதிக்க முடிவு செய்தார்.

இருப்பினும் சிவனின் திருவடியை விரைவில் அடைந்து விடவேண்டும் என்று எண்ணினார். அதை அவரது திருவாசகப் பாடல்கள் ஒவ்வொன்றும் எடுத்து இயம்புகின்றன. அவரது திருவாசகப் பாடல்கள் சிவனது பெருமைகளை மிக இனிமையாக எடுத்துக்கூறி மக்கள் எல்லோரும் சிவனை அடைந்து பேரின்பம் அனுபவிக்க வேண்டும் என்கிறார். சிவனை அடையாவிட்டால் பிறப்புக்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். பிறப்பென்பது பெரும்துன்பம். அதை நீக்கிவிடு. சிவனே என்று ஒவ்வொரு திருவாசகப் பாடல்களிலும் சிவனை வேண்டுகிறார். உலக இன்பங்கள் என்னை ஆட்கொள்ளாது பாதுகாத்து உன்னை நான் அடைய வழிசெய் என்பது அவரது கோரிக்கையாகும். அவரது பாடல்களில் சித்தாந்த தத்துவம், சைவக் கோட்பாடு, முத்திநிலை பற்றிக் கூறுவன. அதைவிட ஒவ்வொரு திருவாசகப் பாடலிலும் வெவ்வேறு தலங்களில் கோவில் கொண்டிருக்கும் சிவனின் பெருமையும், அவ்வூரின் பெருமையும், அவ்வூரில் அமைந்திருக்கும் திருக்கோவிலின் பெருமையும் கூறப்பட்டுள்ளது. சில பாடல்களில் தன்னைக் கன்னிப்பெண்ணாக உருவகித்தும் பாடல்களைப் பாடியுள்ளார். அவர் பெண்கள் சிவைப் போற்றிப் புகழ்ந்து ஆடிப்பாடுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். உதாரணமாகத் திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணப் பாடல்கள் பெண்கள் சிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடுவனவாக அமைந்துள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள சிவத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு இறுதியாக மாணிக்கவாசகர் சிதம்பரத்திற்கு வந்தார். அங்கு கூத்தப் பெருமானைத் தரிசித்தபோது கூத்தப் பெருமானின் ஆடலை அவர் கண்குளிரக் கண்டார். கண்டதும் பரவசநிலையை அடைந்து பல திருவாசகங்களைப் பாடினார். தில்லையில் உள்ள மடத்தில் தங்கிய மாணிக்கவாசகர் கோவிலுக்குச் சென்று வணங்குவார். பின் ஞானதிட்டையில்

அமர்ந்திருந்து பாசுரங்களைப் பாடுவார். அப்போது அவைதிக சமயத்தவர்களுடன் வாதிட்டாா. அத்துடன் ஓர் ஊமைப் பெண்ணைப் பேசச் செய்தார். அத்துடன் தான் பெற்ற பேரின்பநிலையை அனைவரும் பெற வேண்டுமென்று உரையாற்றுவார்.

இவ்வாறு மாணிக்கவாசகர் சிவபெருமானின் புகழைப் பாடிப் போற்றி வணங்கிவரும்போது ஒரு நாள் அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து "சிவனடியாரே நீர் தினமும் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடும் பாடல்களை நான் எழுத விரும்புகிறேன்; அதற்கு அனுமதி தரவேண்டும்" என்று கேட்டார். அதற்கு மாணிக்கவாசகர் சம்மதித்துத் தாம் பாடிய பாடல்களைத் திரும்பவும் பாட அதை அந்தப் பிராமணர் ஏட்டில் எழுதினார். பின்பு தில்லைப் பெரும்பனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து ஒரு கோவைப் பிரபந்தம் பாடித் தரமாறு அந்த அந்தணர் கேட்டார். மாணிக்கவாசகர் அதற்கு ஒப்புக்கொண்டு 'திருக்கோவையார்' என்ற பிரபந்தத்தைப் பாடினார். அதை எழுதி முடித்ததும் அந்த அந்தணர் மாயமாக மறைந்து விட்டார். அவரைத் தேடிக் காணாத மாணிக்கவாசகர் அதிர்ச்சியடைந்தார். வந்தவர் சிவபெருமான் எனத் தீர்மானித்தார்.

மறுநாட்காலை பூசை செய்வதற்காக வந்த அந்தணர் படியில் இரு ஏட்டுச்சுவடிகள் இருக்கக் கண்டார். அவர் அதை எடுத்துப் பார்த்தபோது அவை மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் எனக் கண்டு கொண்டார். அதில் வாதவூரன் சொல்லச் சொல்ல அம்பலவாணன் எழுதியது என்ற குறிப்பும் அழகிய சிற்றம்பலமுடையான் என்ற ஒப்பமும் இருந்தது. அந்த அதிசயத்தை அந்தணர் வியப்புடன் எல்லோருக்கும் சொல்ல, அது நாடு முழுவதும் பரவியது. அதை அறிந்த மாணிக்கவாசகர் மிக்க மகிழ்ந்து சிவனின் அருட்செயலை நினைத்து ஆனந்தக்கண்ணீர் வடித்தார்.

அந்தச் செய்தியை அறிந்த தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர் மாணிக்கவாசகரை வந்து சந்தித்து வணங்கி, "தாங்கள் பாடிய திருவாசகத்தின் பொருளை எமக்குச் சொல்ல வேண்டும்" என்று கேட்டனர். அவர்களைக் கோவிலின் கர்ப்பக்கிருகத்துள் அழைத்துச் சென்று அங்கு வீற்றிருந்த அம்பலத்தரசனைக் காட்டி, "இது தான் எனது பாட்டின் பொருள்" என்று கூறி மறைந்தார். அன்று ஆனி மாத மக நாள். அடிகளாருக்கு அப்போது வயது முப்பத்திரண்டு. ஆனிமாத மகம் நட்சத்திரத்தில் மக்கள் அவரது குருபூசையைக் கொண்டாடுகின்றனர்.

மாணிக்கவாசகரின் வாழ்க்கை வரலாறு அன்பு நெறியை அடிப்படையாகக் கொண்டது. அவரது பாடல்களைத் தேன் என்று சொல்வார்கள். எப்போது அவற்றைப் பாடினாலும் பாடியவரது நா இனிக்கும். கேட்பவரது காதுகள் இனிக்கும். பாடுவோரதும், கேட்போரதும் உள்ளம் பரவசமடையும். திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பது பழமொழி.

"ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி"

## மாணிக்கவாசகர் செய்த அற்புதங்கள்

1. சிவபெருமான் மாணிக்கவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கியது.
2. மாணிக்கவாசகருக்காகச் சிவபெருமான் மண் சுமந்தது.
3. பிற சமயத்தவனை வாதில் வென்றது.
4. ஊமைப்பிள்ளையை பேச வைத்தது.
5. தான் பாடிய பாடல்களைச் சிவபெருமானைக் கொண்டு எழுதுவித்தது.
6. எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க மறைந்தது.

## திருவாசகம் பற்றிய தகவல்கள்

1. சிவபுராணம் திருப்பெருந்துறையில் சிவனது அனாதிமுறைமை.
2. கீர்த்தித் திருவகல் தில்லையில் அருளியது. புகழ்ச்சி பற்றியது.
3. திருவண்டப்பகுதி தில்லையில் அருளியது.
4. போற்றித் திருவகல் தில்லையில் அருளியது.
5. திருச்சதகம் பக்தி வைராக்கியம் தில்லையில் அருளியது.
6. நீத்தல் விண்ணப்பம் பிரபஞ்ச வைராக்கியம் உத்தரகோச மங்கையில் அருளியது.
7. திருவெம்பாவை சக்தியை வியந்துபாடியது திருவண்ணாமலையில் அருளியது.
8. திருவம்மானை ஆனந்தக் களிப்பு திருவண்ணாமலையில் அருளியது.
9. திருப்பொற்சுண்ணம் ஆனந்த மனோலயம் திருவண்ணாமலையில் அருளியது.
10. திருக்கோத்தும்பி சிவனோடு ஐக்கியம் திருவண்ணாமலையில் அருளியது.
11. திருத்தென்கோணம் சிவனோடு அடைவு தில்லையில் அருளியது.

12. திருச்சாளல் சிவனது காருண்யம் தில்லையில் அருளியது.

13. திருப்பூவல்லி மாயாவிடயம் நீங்குதல் தில்லையில் அருளியது.

14. திருவுந்தியார் ஞானவெற்றி தில்லையில் அருளியது.

15. திருத்தோணோக்கம் பிரபஞ்சத்தி தில்லையில் அருளியது.

16. திருப்பொன்னூசல் அருட்சக்தி தில்லையில் அருளியது.

17. அன்னை பத்து ஆத்ம பூரணம் தில்லையில் அருளியது.

18. குயிற்பத்து ஆன்ம இரங்கல் தில்லையில் அருளியது.

19. திருத்தசாங்கம் அடிமை கொண்ட முறைமை தில்லையில் அருளியது.

20. திருப்பள்ளியெழுச்சி திரோதானசக்தி திருப்பெருந்துறையில் அருளியது.

21. கோவில் மூத்த திருப்பதிகம் அனாதியாகிய சற்காரியம் தில்லையில் அருளியது.

22. கோவில் திருப்பதிகம் அனுபோக இலக்கணம் தில்லையில் அருளியது.

23. செத்திலாப்பத்து சிவானந்தம் அவைறுக் கொளாமை திருப்பெருந்துறையில் அருளியது.

24. அடைக்காலப்பத்து பக்குவ கிண்ணயம் திருப்பெருந்துறையில் அருளியது.

25. ஆசைப்பத்து ஆன்ம இலக்கணம் திருப்பெருந்துறையில் அருளியது.

26. அதிசயப்பத்து முத்தி இலக்கணம் திருப்பெருந்துறையில் அருளியது.

27. புணர்ச்சிப்பத்து அத்துவித இலக்கணம் திருப்பெருந்துறையில் அருளியது.

28. வாழாப்பத்து முத்தி உபாயம் திருப்பெருந்துறையில் அருளியது.

29. அருமைப்பத்து மகாமாயா சக்தி திருப்பெருந்துறையில் அருளியது.

30. திருக்கழிக்குன்றப் பதிகம் சற்குரு தரிசனம் திருக்கிக்குன்றத்தில் அருளியது.

31. கண்டபத்து நிருத்ததரிசனம் தில்லையில் அருளியது.

32. பிரார்த்தனைப்பத்து சதாமுத்தி திருப்பெருந்துறையில் அருளியது.

33. குழைத்தபத்து ஆன்மநிவேதனம் திருப்பெருந்துறையில் அருளியது.

34. உயிருண்ணிப்பத்து சிவானந்தம் மேலிடல் திருப்பெருந்துறையில் அருளியது.

35. அச்சப்பத்து ஆனந்தம் உறுதல் தில்லையில் அருளியது.

36. திருப்பாண்டிப்பதிகம் சிவானந்த விளைவு திருப்பெருந்துறையில் அருளியது.

37. பிடித்தபத்து முக்திக்காப்பு உரைத்தல் திருக்கோணபுரத்தில் அருளியது.

38. திருவசனம் சுட்டறிவு ஒழித்தல் தில்லையில் அருளியது.

39. திருப்புலம்பல் சிவானந்த தெளிவு திருவாவூரில் அருளியது.

40. குலாப்பத்து அனுபவம் இடையீடுபடாமை தில்லையில் அருளியது.

41. அற்புதப்பத்து அனுபவ ஆற்றாமை திருப்பெருந்துறையில் அருளியது.

42. சென்னிப்பத்து சிவவிளைவு திருப்பெருந்துறையில் அருளியது.

43. திருவார்த்தை அறிவித்து அன்புறுதல் திருப்பெருந்துறையில் அருளியது.

44. எண்ணப்பதிகம் ஒழியா இன்பத்து உவகை தில்லையில் அருளியது.

45. யாத்திரைப்பத்து அனுபவ அதீதம் உரைத்தல் தில்லையில் அருளியது.

46. திருப்படை எழுச்சி பிரபஞ்சப்போர் தில்லையில் அருளியது.

47. திருவெண்பா அணைந்தோர் தன்மை திருப்பெருந்துறையில் அருளியது.

48. பண்டுஆய நான்மாறை அனுபவத்திற்கு ஐயமில்லை உரைத்தல் திருப்பெருந்துறையில் அருளியது

49. திருப்படை ஆட்சி: படை 2 உபாதி 3 மகாவாக்கியங்கள் 4. பொருளில் இரண்டு நிலைகள் 5. முக்தி தில்லையில் அருளியது.

50. ஆனந்தமாலை சிவ அனுபவ விருப்பம் தில்லையில் அருளியது.

51. அச்சோப் பதிகம் அனுபவ வழி அறியாமை தில்லையில் அருளியது.

இவரது திருவாசகம் நம்பியாண்டார் நம்பியால் திருமுறை யாகத்தால் நீக்கப்பட்டது.